Registered as a NewsPaper

விலை ரூபா : 8.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் -16 | திருவள்ளுவர் ஆண்டு- 2036 | ஆனி -06 | 20-06-2005 | திங்கட்கிழமை | ஓசை 122



கணேசா நகையகம்

தங்கநகை உலகில் தமக்கென தனியிடம் பதித்தவர்கள்

இல:123, பஜார் வீதி, வவுனியா.
T.P.-024-2222464

இல:194, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P.-021-2225987

(சி-12120)

# சமாதானப் பேச்சுவார்த்தை குறித்து தற்போது எதுவும் கூறமுடியாது!

## -அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன்

(கிளிநொச்சி)

அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையிலான நேரடி சமாதானப் பேச்சுக்கள் குறித்து தற்போதைய நிலையில் எதுவும் கூறக்கூடியதாக இல்லை என்று விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்துள்ளார்.

சர்வதேச செய்தி ஸ்தாபனம் ஒன்றுக்கு கிளிநொச்சியிலுள்ள விடுதலைப்புலிகளின் சமாதானச் செயலகத்தில் வைத்து அளித்த விசேட நேர்காணலிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; ஆழிப்பேரலை நிவாரண நிதியை பகிர்வதற்கு அமைக்கப்பட்ட பொதுக்கட்டமைப்பானது ஒரு நிர்வாக அலகு மட்டுமே ஆகும். கிடைக்கப்பெற்ற நிவாரண நிதியை பகிர்வதற்கு முன்மொழியப்பட்டுள்ள இலகுவான கட்டமைப்பு. இது ஒன்றும் அரசியல் தீர்வுத்திட்டமில்லை. இதற்கும், சமாதான முயற்சிகளுக்கும் நேரடியாக எந்தத் தொடர்பும் இல்லை.

ஆனால் மேற்படி பொதுக்கட்டமைப்பு சிறிலங்கா அரசுக்கும், விடுதலைப்புலிகளுக்கும் இடையில் நம்பிக்கையை கட்டி யெழுப்பும் விடயமாக அமையலாம்.

(12ஆம் பக்கம் பார்க்க)

# யாழ்.பல்கலையில் 'தமிழ்த் தேசியத்தின் குரல்'

## மனிதநேய அமைப்புக்களின் ஏற்பாட்டில் நடந்த எழுச்சி நிகழ்வு!

(யாழ்ப்பாணம்)

**பௌத்த சிங்கள பேரினவாதத்துக்கு எதிரான "தமிழ்த்தேசியத்தின் குரல்" என்ற எழுச்சி நிகழ்வு நேற்று முற்பகல் 10 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெற்றது.**

யாழ்.மாவட்ட மனிதநேய அமைப்புக்கள் ஒன்றியத்தின் தலைவர் சு.பரமநாதன் தலைமையில் இந்நிகழ்வு நடைபெற்றது. இதில் பொதுச்சுடரினை யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் ஏற்றி வைத்தார். தமிழீழத்தேசியக் கொடியினை யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் செல்லகுமார் ஏற்றினார். தொடர்ந்து மதப்பெரியார்கள், (12ஆம் பக்கம் பார்க்க)

## "பேரினவாதக் குரூரத்தை தோற்கடித்து எங்கள் சுயத்தை நாமே நிர்ணயிப்போம்"

**சிங்கள பௌத்த பேரினவாதக்குரூரத்தை தமிழ்மக்கள் ஒன்றிணைந்து தோற்கடித்து ஆக்கிரமிப்புப் படைகளிடமிருந்து எமது பாரம்பரிய வாழ்விடங்களை விடுவித்து எங்கள் நிலத்தில்எங்கள் பலத்தில் எங்கள் சுயத்தை நாமே நிர்ணயிப்போம்.**

இவ்வாறு நேற்று யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இடம்பெற்ற தமிழ்த் தேசியத்தின் குரல் எழுச்சி நிகழ்வில் வெளியிடப்பட்ட பிரகடனத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அப் பிரகடனத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது; தென்னிலங்கையில் பயங்கரமான சிங்கள பௌத்த பேரினவாதம் தலைவிரித்தாடுகிறது. (12ஆம் பக்கம் பார்க்க)



தமிழ்த்தேசியத்தின் குரல் நிகழ்வில்...

## முஸ்லிம் மக்களின் எதிர்காலம் குறித்து எமது தலைமை அதிக அக்கறை கொண்டுள்ளது

### முஸ்லிம்களுடனான ஒன்றுகூடலில் யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர்

(யாழ்ப்பாணம்)

முஸ்லிம் மக்களின் எதிர்காலம் குறித்து எமது தலைமை அதிக அக்கறை கொண்டுள்ளதென யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி தெரிவித்துள்ளார்.

நேற்று யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற முஸ்லிம்களுடனான ஒன்றுகூடலில் கலந்து கொண்டு அவர்கள் மத்தியில் கருத்து தெரிவித்த போதே இவ்வாறு தெரிவித்தார்.

பொதுக்கட்டமைப்பு என்பது தமிழ் மக்களின் முக்கிய அபிலாசைகள் மட்டுமன்றி முஸ்லிம் மக்களின் அபிலாசைகளையும் தீர்த்து வைப்பதாகவும் அமைகின்றது.

எனவே சிங்களப் பேரினவாதிகளால் சொல்லப்படும் எதிர்ப்பலைகள் தமிழ் மக்களை மட்டுமின்றி முஸ்லிம் மக்களையும் பாதிப்பதாக

(12ஆம் பக்கம் பார்க்க)

## புளொட் சிரேஷ்ட உறுப்பினர் வவுனியாவில் சுட்டுக்கொலை

(வவுனியா)

வவுனியாவில் வைத்து புளொட் தேசவிரோதக் குழுவின் சிரேஷ்ட உறுப்பினர் ஒருவர் நேற்றிரவு இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

கோயில்குளம் பகுதியில் திருக்குளம்பிள்ளையார் வீதிக்கு அருகில் வைத்து இரவு 8.30 மணிக்கு இவர் சுட்டுக்கொல்லப்பட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

உதயகுமாரசிங்கம் வல்லிபுரம் (வயது-42) என்பவரே சுட்டுக் கொல்லப்பட்டவராவார்.இவர்மூன்று பிள்ளைகளின் தந்தையாவார்.

இக்கொலைச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை வவுனியா பொலிசார் தற்போது மேற்கொண்டு வருகின்றனர்.

## த.தே.கூ பிரதிநிதிகளுடன் ரணில் விக்கிரமசிங்க சந்திப்பு

(கொழும்பு)

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு பிரதிநிதிகளுக்கும், ஐக்கிய தேசிய கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்கவிற்கும் இடையிலான சந்திப்பொன்று நேற்றையதினம் இடம்பெற்றுள்ளது. இச்சந்திப்பின் போது சுனாமி பொதுக்கட்டமைப்பு சம்பந்தமாக பிரஸ்தாபிக்கப்பட்டதோடு இப்பொதுக் கட்டமைப்பிற்கு ஐக்கிய தேசியக்கட்சி பூரண ஆதரவு வழங்கவேண்டுமென தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் வேண்டுகோள் விடுத்ததாகவும் தெரிகிறது.

இச்சந்திப்பின் போது தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் சார்பில் கட்சியின் செயற்குழுத்தலைவர் ஆர்.சம்பந்தன் உட்பட்ட சில

(12ஆம் பக்கம் பார்க்க)

## பேரினவாத சக்திகளை கண்டித்து வடமராட்சியில் இன்று பேரணி

(வடமராட்சி)

சுனாமி அனர்த்த நிவாரண பொதுக்கட்டமைப்புக்கு எதிரான பௌத்த சிங்கள பேரினவாத சக்திகளை கண்டித்து யாழ். மாவட்ட கடற்றொழிலாளர்கள் மாபெரும் கண்டனப் பேரணி ஒன்றை நடத்தவுள்ளனர்.

யாழ்.மாவட்டத்திலுள்ள பெருமளவான கடற்றொழிலாளர்கள் ஒன்று திரண்டு இப்பேரணியின் போது பௌத்த சிங்கள பேரினவாத வெறியர்களுக்கு எதிராக குரல் கொடுப்பர் என ஏற்பாட்டுக் குழுவினர் தெரிவித்தனர்.இந்தப் பேரணி இன்று முற்பகல் பத்து மணிக்கு வடமராட்சியில் இடம்பெறுகின்றது.

(12ஆம் பக்கம் பார்க்க)

# "தமிழ்த்தேசியத்தின் குரல்" எழுச்சி நிகழ்வில்...




## வரிவிளம்பரம்

### காணி விற்பனைக்கு

புதுக்குடியிருப்பு கைவேலியில் 02ஏக்கர் உறுதிக்காணி (தென்னை பயிரிடப்பட்ட நிலையில்) விற்பனைக்குண்டு. தொடர்பு:- நவரத்தினம் (அண்ணாவி), கைவேலி. (காலை 7.30 இற்கு முன் வரவும்). (6172)

### சீமெந்துக்கல் விற்பனைக்குண்டு

4ஆம் கட்டை, மல்லாவி வீதி, வன்னிவிளான்குளத்தில் இயந்திரத்தால் செய்த சீமெந்துக்கல் விற்பனைக்குண்டு.

5" x 6" x 12" - ரூபா 23.00
4" x 6" x 14" - ரூபா 20.00

(6211)

### விண்ணப்பப்படிவங்கள்

தேசிய கல்வியியல் கல்லூரிக்கான அனுமதி-2006 படிவம்,O/L பரீட்சைக்கான படிவம், ஆசிரியர் இடமாற்ற நியமனம் பெறுவதற்கான படிவம் போன்ற பல்வேறு படிவங்களையும் பெற் றுக்கொள்ளலாம். நிலவு கணினி தொழில் நுட்பம், கச்சேரி அருகாமை, கிளிநொச்சி. (6278)

### Digital Photo Album உருவாக்குபவர்களுக்கு

எம்மிடம் மேற்படி வேலைக்கான **Frame**, சீனறீஸ், முன்பக்கம் ஆகியன **Photoshop File** ஆக உள்ளன. தொடர்புகளுக்கு நிலவு கணனித் தொழில்நுட்பம், கச்சேரி அருகாமை, கிளிநொச்சி.(சி.12207)


## யோகபுரம் மகாவித்தியாலயத்தில் சமகால அரசியல் கருத்தரங்கு

பொது அமைப்புகளுக்கான சமகால அரசியல் தொடர்பான கருத்தரங்கு நிகழ்வு நேற்று முன்தினம் யோகபுரம் மகாவித்தியாலய மண்டபத்தில் இடம் பெற்றது.

காலை 11.00 மணியளவில் துணுக்காய் தேசிய எழுச்சிப் பேரவை உறுப்பினர் இ.சண்முகம் தலைமையில் இடம் பெற்ற நிகழ்வில் கருத்துரைகளை முல்லை.மாவட்ட அரசியல்துறை மகளிர் பொறுப்பாளர் வேழினி, கோட்ட தேசிய எழுச்சிப் பேரவை செயலர் அமிர்தலிங்கம், முல்லை மாவட்ட அரசியல் துறை துணைப்பொறுப்பாளர் ஆகியோர் ஆற்றினர். இந்நிகழ்வில் அரச, அரச சார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், போராளிகள் பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (24)

## சிகிச்சைக்கு ஏற்பாடு

(புதுக்குடியிருப்பு)

புதுக்குடியிருப்பு வைத்தியசாலையில் இம்மாதம் 29 ஆம் திகதி காலை 10.00 மணியளவில் பேராசிரியர் தயா சோமசுந்தரம் அவர்களினால், முல்லைத்தீவு மாவட்டத்தில் வாழ்கின்ற உள நல பாதிப்படைந்த நோயாளிகளுக்கு சிகிச்சையளிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதென முல்லை.மாவட்ட பிரதிமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி து.வி ஜெயக்குலராசா தெரிவித்துள்ளார். (08)

## கண்டாவளைக் கவிராயருக்கு வவுனியாவில் கௌரவிப்பு

இலக்கியச் செல்வர் கவிமணி கண்டாவளைக் கவிராயர், (சி.கு. இராசையா-ஓய்வுபெற்ற கிராம சேவையாளர்) இலக்கியச் செல்வர் கலைமாமணி பொன்.தெய்வேந்திரம் (முன்னாள் இசை விரிவுரையாளர், கோப்பாய் அரசினர் ஆசிரிய கலாசாலை) ஆகிய இரு இலக்கிய கர்த்தாக்கள் வவுனியாவில் கௌரவிக்கப்படவுள்ளனர்.

வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டம் நடாத்தும் எட்டாண்டு நிறைவுவிழாவிலேயே இச்சான்றோர் விருது வழங்கலும் இடம் பெறவுள்ளது.

நகரசபை மண்டபத்தில் நாளை மாலை ஐந்து மணிக்கு நடைபெறவுள்ள இந்நிகழ்வுக்கு வவுனியா தேசியக் கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர் ந.இரவீந்திரன் தலைமை தாங்கவுள்ளார்.

இந்நிகழ்வில் கௌரவிப்பு உரையினை யாழ்.பல்கலைக்கழக வவுனியா வளாக ஆங்கில விரிவுரையாளர் கந்தையா சிறீகணேசன் நிகழ்த்துவார். கௌரவவிருந்தினர்களில் ஒருவரான யாழ்.பல்கலைக்கழக வவுனியா வளாக முதல்வர், பேராசிரியை திருமதி.ஆர். மகேஸ்வரன் விருதினை வழங்க, இந்நிகழ்வின் பிரதம விருந்தினர் வவுனியா அரச அதிபர் சி.சண்முகம் பொன்னாடை அணிவிப்பார்.

மற்றொரு கௌரவ விருந்தினர் வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி க.பேர்னாட் மாருதம்-சஞ்சிகை ஆறின் வெளியீட்டுரையினை நிகழ்த்தி வெளியிட்டு வைப்பார். முதற் பிரதியினை சிறப்பு விருந்தினர்களில் ஒருவரான வவுனியா ப.நோ.கூ சங்கத் தலைவர் பூ.குமாரகுலசிங்கம் பெற்றுக்கொள்வார். ஆய்வுரையினை வவுனியா கல்வியியற் கல்லூரி தமிழ்விரிவுரையாளர் எஸ்.கௌரிகாந்தன் நிகழ்த்துவார்.

கலை நிகழ்வுகளாக வவுனியா நர்த்தனாஞ்சலி நாட்டியப் பள்ளியினரின் குழு நடனமும், வவுனியா நிருத்திய நிகேதன கலாமன்ற மாணவிகளின் பாஞ்சாலி சபதம் நாட்டிய நாடகமும் இடம் பெறவுள்ளன.

## சங்கப் புனரமைப்புக் கூட்டம்

மல்லாவிப்பிரதேச முச்சக்கரவண்டி, உந்துருளி சங்கங்களிற்கான புனரமைப்புக்கூட்டம் மல்லாவி அரசியல்துறைச் செயலக பாரதி ஒன்று கூடல் மண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம் பெற்றுள்ளது.

பிரதேச தொழிற்சங்கப் பொறுப்பாளர் பெ.தனம் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் முல்லை.மாவட்ட அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் செல்வம் கருத்துத் தெரிவிக்கையில்;

முச்சக்கர வண்டி உரிமையாளர்களின் இன்றைய சேவைகளும் போராட்ட காலங்களில் முச்சக்கரவண்டி, உந்துருளி உரிமையாளர்களின் பங்களிப்புக்களும் சிறந்ததாக இருந்தன எனக் கூறினர். இதன் போது புதிய நிர்வாகத்தெரிவும் இடம்பெற்றது. இதில் முச்சக்கர வண்டிச் சங்கத்தலைவராக அ.நவரட்ணராஜாவும், பெ.பாஸ்கரன் செயலாளராகவும், கு.ஜெயசீலன் பொருளாளராகவும், உப தலைவராக க.கமலேஸ்வரனும், உபசெயலாளராக க.சண்முகராஜாவும் தெரிவு செய்யப்பட்டதுடன், ஒன்பது உறுப்பினர்கள் தெரிவும் இடம்பெற்றன.(24)

## தீலீபன் மருத்துவ சேவையினரால் கடந்த மாதம் 23100 பேருக்கு சிகிச்சை

(அலுவலகசெய்தியாளர்)

தியாக தீபம் திலீபன் மருத்துவ சேவையினரால் திலீபன் மருத்துவ நிலையத்தினூடாகவும், நடமாடும் மருத்துவ சேவையினூடாகவும் கடந்த வைகாசி மாதம் முதலாம் திகதி முதல் 31 ஆம் திகதி வரை 23100 நோயாளர்களுக்கு சிகிச்சையினை வழங்கியுள்ளனர்.

வைரஸ் காய்ச்சல், மலேரியா, நெருப்புக்காய்ச்சல், இருதய நோய், உயர்குருதி அமுக்கம், நீரிழிவு, தொற்றுநோய்கள் போன்ற 30 இற்கும் மேற்பட்ட நோய்களுக்கு சிகிச்சை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

வடக்கு கிழக்கு மாகாணங்களில் 16 கிராமங்களில் மேற்படி மருத்துவ நிலையத்தினூடாகவும், நடமாடும் மருத்துவ சேவையினூடாகவும் பலதரப்பட்ட நோய்களுக்கான சிகிச்சைகள் வழங்கப்பட்டுள்ளது.

குறிப்பாக கற்சிலைமடு, அடம்பன், பிரமந்தனாறு பகுதிகளிலேயே அதிக எண்ணிக்கையான நோயாளர்களுக்கு சிகிச்சை வழங்கப்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (சோ)

## கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவில் காணி அனுமதிப்பத்திரம் வழங்கல்

(அலுவலகசெய்தியாளர்)

கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச செயலக காணி அலுவலகத்தினரால் கரைச்சிப் பிரதேச செயலகர் பிரிவில் உள்ள காணி உரிமையாளர்களின் தற்காலிக காணி அனுமதிப்பத்திரங்களை நிரந்தரக் காணி அனுமதிப்பத்திரமாக மாற்றுவது மற்றும் காணி புதுப்பதிவுகள் போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இதனடிப்படையில் எதிர்வரும் 28 ஆம் திகதியன்று கிளிநொச்சி தொண்டமான் நகர் கிராம மக்களுக்கான நடவடிக்கைகள் கிளி.கரைச்சி பிரதேச செயலகத்தில் நடைபெறவுள்ளது. அன்றையதினம் மேற்படி பதிவுகளை மேற்கொள்ள வரும் காணி உரிமையாளர்கள் அதற்குரிய சகல ஆவணங்களுடன் சமுகமளிக்கும் வண்ணம் கரைச்சிப் பிரதேச செயலர் செல்வி. க.சுலோஜினி வேண்டியுள்ளார். (சோ)



பாக்தாத்தின் மேற்கேயுள்ள கறபில்லாஷில் கார்க்குண்டுத் தொழிற்சாலை என சந்தேகிக்கப்படும் ஒரு பிரதேசத்திற்கு அண்மையாக அமெரிக்கப் படைச் சிப்பாய் ஒருவர் காணப்படுகிறார்.

## நேபாளத்தில் எப்.எம் செய்திக்குத் தடை அரசுக்கு அந்நாட்டு நீதிமன்று கடிதம்

தனியார் எப்.எம் செய்தி ஒலிபரப்பத் தடை விதித்தது தொடர்பாக நேபாள அரசுக்கு அந்நாட்டு உயர் நீதிமன்று கடிதம் அனுப்பியுள்ளது.

நேபாளத்தில் கடந்த பெப்ரவரியில் ஷெர் பகதூர் தலைமையிலான அரசை மன்னர் ஞானேந்திரா கலைத்தார். தற்போது அவரே ஆட்சி செய்து வருகின்றார். ஆட்சியில் அமர்ந்ததும் நாட்டில் அவசர நிலையை பிரகடனம் செய்தார். தொலை பேசிகள் பயன்படுத்தக் கூட மக்களுக்கு தடை விதிக்கப்பட்டது. எப்.எம். அலைவரிசை அரசின் தடையை மீறி செய்தி ஒலிபரப்பின.

இந்த நிறுவனங்களுக்கு நேபாள அரசு கடந்த வாரம் கடிதம் அனுப்பியது. அரசு தடையை மீறி செய்திகள் ஒலிபரப்பினால் உரிமம் ரத்துச் செய்யப்படும் என்று எச்சரித்தது. இதை எதிர்த்து நேபாள உயர் நீதிமன்றில்எப்.எம். நிறுவனங்கள் வழக்குத் தொடர்ந்தன. இது தொடர்பாக அரசிடம் விளக்கம் கேட்டு நீதிபதிகள் கடிதம் அனுப்பியுள்ளனர்.



கறபில்லாப் பிரதேசத்தில் ஆயுதங்கள் மறைத்து வைக்கப்பட்டிருந்ததான சந்தேகத்தில் அழிக்கப்பட்ட கட்டடத்தின் எஞ்சிய பகுதிகளில் ஒரு ஈராக்கியப் படை வீரர் தேடுதல் நடத்துகின்றார்.

## குவத மாலாவில் மண்சரிவு 22 பேர் பலி; 40பேர் காயம்

குவத மாலாவிலுள்ள சான் அண்டோனியோ செனகூபகுதியில் பலத்த மழையால் ஏற்பட்டநிலச்சரிவில் 100 இற்கும் மேற்பட்ட வீடுகள் மண்ணில் புதைந்துவிட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் குழந்தைகள் உட்பட 22 பேர் பலியானார்கள் 40 இற்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்தனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## மியன்மார் அரசுக்கு எதிராக அமெரிக்காவில் ஆர்ப்பாட்டம்

(வோஷிங்டன்)

மியன்மாரின் எதிர்க் கட்சித் தலைவி சூகியை இராணுவக் கட்சி சிறையில் அடைத்துள்ளமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து அவரது 60 ஆவது பிறந்த நாளான நேற்று ஆர்ப்பாட்டம் நடைபெற்றுள்ளது. மியன்மர் அரசாங்கத்தின் அடக்கு முறைக்கு எதிர்ப்புத் தெரிவித்தே ஆர்ப்பாட்டம் நடத்தினார்கள்-அமெரிக்காவில் வாஷிங்டன் நகரிலுள்ள மியன்மர் தூதரகம் முன்பும் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. இதற்கிடையில் 60ஆவது பிறந்த நாளையொட்டி சூகிக்கு அதிபர் ஜோர்ஜ்புஷ் வாழ்த்துச்செய்தி அனுப்பினார்.

## ஐரோப்பிய யூனியன் மாநாட்டில் குழப்பம் பிரிட்டன் பிடிவாதம்: ஏழைநாடுகள் அதிருப்தி

(பிரசல்ஸ்)

**ஐரோப்பிய யூனியன் நாடுகளைச் சேர்ந்த 25 நாடுகளின் தலைவர்கள் பங்கேற்ற உச்சி மாநாட்டில் நீண்டகால நிதி அணுகுமுறை குறித்து முடிவு எட்டப்படாமல் குழப்பம் ஏற்பட்டதால் அடிப்படை விடயங்களில் கருத்து ஒற்றுமை இல்லாத நிலையில் இனி ஐரோப்பிய யூனியன் என்ற அமைப்பின் எதிர்காலம் என்ன என்ற கேள்வி எழுந்திருக்கிறது.**

இரண்டாம் உலகப்போருக்குப் பின் அமைதியும் வளமும் தேவை என்ற அடிப்படையில் உருவானது ஐரோப்பிய யூனியன் அமைப்பு. உலகப் போர் என்பது நடந்து சரித்திரத்தில் இடம்பெற்றது. அதேபோல கம்யூனிசமும் முடிந்து தற்போது வேறு உலகம் உருவெடுத்து இருக்கிறது. இதில் ஐரோப்பிய யூனியனின் எதிர்கால வளம் எப்படி என்பதே இந்த நாடுகளின் கவலையாகும். இவர்கள் உலகத்தோடு மாற வேண்டும் ¬ன்று விரும்புகின்றனர். மேலும் பிரிட்டன் மற்றும் வடக்கு ஐரோப்பிய நாடுகள். ஓரணியாகவும், பிரான்ஸ், ஜேர்மனி போன்ற நாடுகள் அரசியல்சுதந்திரம் அதிகம் விரும்பியும் குரல் எழுப்புகின்றன.

ஒருபக்கம் 25 நாட்டுத் தலைவர்கள் ஏற்கனவே உருவாக்கப்பட்ட அரசியலமைப்புச் சட்டத்தை அப்படியே ஏற்பதா அல்லது தற்போது அமைதிகாப்பதா என்ற நிலையில் இருந்தனர். அதேசமயம் அடுத்த ஐந்தாண்டுக்கான பட்ஜெட் குறித்த முடிவு எடுப்பதில் நேற்று முன்தினம் உச்சி மாநாட்டில் இழுபறி ஏற்பட்டது.

கடந்தமாதம் 29 ஆம்திகதி ஐரோப்பிய அரசமைப்புச் சட்டத்திற்கு எதிர்ப்பாக பிரான்சும் அடுத்ததாக கடந்த முதலாம்திகதி நெதர்லாந்தும் வாக்களித்தது. ஐரோப்பிய யூனியன் எதிர்காலம் என்ன ஆகுமோ என்ற கேள்வியை இது எழுப்பியது. இனி எப்படி 25 நாடுகளும் ஒன்றிணைந்து செயற்படுவது அதைவிட யூரோ நாணயத்தின் கதி எதிர்காலத்தில் எப்படி என்ற கேள்வி இவர்களை வாட்டத்தொடங்கியது இந்த பயத்தில் பல உறுப்பு நாடுகள் ஒட்டு மொத்த அரசியல் அமைப்புச் சட்டத்தை ஏற்பது குறித்த வாக்கெடுப்பை தள்ளிவைத்து விட்டன.

நேற்று முன்தினம் உச்சி மாநாட்டில் 2007 முதல் 2013 ஆம் ஆண்டு வரையிலான ஆறுஆண்டுகால பட்ஜெட் நிதித்தேவை குறித்த முடிவை எடுக்க முடியவில்லை. அதில் பிரான்சுக்கும், பிரிட்டனுக்கும் இடையே கசப்புணர்வு வெளிப்படையாக எழுந்தது. பட்ஜெட்டில் குறிப்பிட்ட அளவில் தாங்கள் தரவேண்டிய தொகையில் சலுகை கேட்டது பிரிட்டன். அதே போல போத்துக்கல்லும் கேட்டது. முடிவில் பத்தாயிரம் கோடி யூரோ பட்ஜெட் திட்டத்தில் முடிவு ஏற்படவில்லை "உச்சிமாநாடு கசப்புணர்வில் முடிந்தது." என்று ஐரோப்பிய யூனியன் அமைப்புத் தலைவரும் லக்சம்பேர்க் பிரதமருமான ஜீன் கிளாடி ஜங்கர் தெரிவித்துள்ளார்.



ஜெருசலேமில் பிரதமரின் காரியாலயத்தில் இஸ்ரேலியப் பிரதமருடனான சந்திப்பிற்கு முன்னர் இஸ்ரேலியப் பிரதமர் ஏரியல் சரோனும், அமெரிக்க இராஜாங்கச் செயலர் கொண்டலீசாரைசும் கை குலுக்குகின்றனர்.



ஜெலிஸ் குடியிருப்பில் இஸ்ரேலியரின் தாக்குதலில் கொல்லப்பட்ட ஜிகாத் இராணுவத்தைச் சேர்ந்த அன்வர் அல் அற்றாவியின் உடலை காசாவில் இறுதிக் கிரியைக்காக பாலஸ்தீனியர்கள் காவிச் செல்கின்றனர்.

## இராணுவ உலங்குவானூர்தி வீழ்ந்து நொருங்கியது சிறுமி உட்பட 2 பேர் பலி; 9பேரைக் காணவில்லை

(லிமா)

பெருவில் இராணுவ உலங்குவானூர்தி ஒன்று அந்நாட்டின் வடபகுதியில் இருக்கும் காட்டுப் பகுதியில் விழுந்து நொருங்கியதில் அந்த விமானத்தில் பயணம் செய்த நான்கு வயதுச் சிறுமி உட்பட இரண்டு பேர் பலியானார்கள். மேலும் ஒன்பது பேரின் கதி என்ன? என்று தெரியவில்லை இதே வேளை

அமெரிக்காவில் நியூயோர்க் நகரிலும் பயணிகளை ஏற்றிச் செல்லும் உலங்குவானூர்தி ஒன்று விபத்துக்குள்ளானது. அந்த உலங்குவானூர்தி அங்குள்ள கிழக்கு நதியில் விழுந்து நொருங்க ஆறு பயணிகளும் இரண்டு விமான ஊழியர்களும் அதிர்ஷ்டவசமாக உயிர்தப்பினார்கள். லேசான காயமடைந்த எட்டுப்பேரும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டடுள்ளனர். நியூயோர்க் நகரில் கடந்த நான்கு தினங்களுக்கு முன்பும் இதேபோன்று ஒரு உலங்குவானூர்தி விபத்து நடந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

## ஈரான் தேர்தல் முடிவில் குழப்பம் அடுத்த வாரம் மீண்டும் தேர்தல்

(தெஹ்ரான்)

ஈரான் அதிபர் தேர்தலில் யாருக்கும்வெற்றி கிடைக்காத நிலை ஏற்பட்டுள்ளது. வெற்றி பெறுவார் என்று கருதப்பட்ட மிதவாத மதத் தலைவர்அக்பர் ஹஷெமி ரப்சஞ்சானிக்கு 50 சதவீத வாக்கு கிடைக்கவில்லை. இதனால் குழப்பம் ஏற்பட்டுள்ளது.

ஈரானில் கடந்த சனியன்று அதிபர் தேர்தல் நடந்தது. இதில் மூன்று கோடியே 20 இலட்சம்பேர் வாக்களித்தனர். வாக்கு எண்ணிக்கை நேற்று முன்தினம் நடந்தது. அதில் எந்த வேட்பாளருக்கும் 50சதவீதம் வாக்கு கிடைக்காத குழப்பமான நிலை ஏற்பட்டது. ரப்சஞ்சானி 21சதவீதமும், தெஹ்ரான் பழமைவாத முன்னாள் மேயர் முகமது அமதீனி 19சதவீதமும் சீர்திருத்த மதத்தலைவர் மெகதி க்ர்ரவ்பி 17 சதவீதமும் வாக்குகள் பெற்றனர். ஏனைய வேட்பாளர்கள் 15 சதவீதத்துக்கும் குறைவான வாக்குகளை மட்டுமே பெற்றனர். ஈரான் தேர்தலில் 50சதவீதவாக்கு பெறும் வேட்பாளரே பதவியேற்க முடியும். எனவே அடுத்த வாரம் வெள்ளிக்கிழமை நடக்கும் இராண்டாவது சுற்றுத்தேர்தலில் ரப்சஞ்சானியும் அமதீனியும் மோதுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.



பாகிஸ்தானின் இஸ்லாமபாத் அருகே பாய்மெல் பகுதியில் சென்று கொண்டிருந்த ஒரு பேருந்து பள்ளத்தில் உருண்டு விழுந்து விபத்திற்குள்ளானது இதில் 20 பயணிகள் பலியானார்கள். 25இற்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்தனர்.விபத்தில் சிக்கிய பேருந்து கவிழ்ந்து கிடக்கும் காட்சி.

# தமிழர் தாயகத்தின் முழுமையான அபிவிருத்திக்கு எமது கைகளில் அதிகாரமிருக்க வேண்டும்

## –பா.உறுப்பினர் பா.அரியநேத்திரன்

(மட்டக்களப்பு)

**வட–கிழக்கு முழுமையாக அபிவிருத்தி செய்யப்பட வேண்டுமாக இருந்தால் வட–கிழக்கின் முழுமையான நிர்வாகம் எமது கைகளில் வந்தடைய வேண்டும் இவ்வாறு மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் தெரிவித்தார்.**

கடந்த வெள்ளிக்கிழமை காலை பத்து மணிக்கு பட்டிப்பளை பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் அபிவிருத்திக்குழுக் கூட்டத்தில் தலைமையுரையாற்றிய பாராளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் தொடர்ந்து பேசுகையில்;

கடந்த இருபது வருட போர் அழிவுகளினால் மட்டக்களப்பு மாவட்டம் முழுமையாகப் பாதிப்படைந்தது. அதில் படுவான்கரைப் பகுதி இலங்கை சுதந்திரமடைந்த காலம் தொடக்கம் இன்றுவரையும் அபிவிருத்தி செய்யப்படாமல் ஒதுக்கப்பட்ட பிரதேசமாக காட்சியளிக்கிறது.

பாராளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து கூடுதலான நிதியை படுவான்கரைக்கு நான் ஒதுக்கியிருக்கிறேன். அந்த நிதியால் மட்டும் அபிவிருத்தியைச் செய்யமுடியாது. இதற்காகத்தான் விடுதலைப் புலிகள் இடைக்கால தன்னாட்சி அதிகாரசபையை கோரியிருந்தனர். அதையும் சிறிலங்கா இனவாதம் தட்டிக்கழித்து விட்டது. சுனாமிக்குப் பின் கோரப்பட்ட பொதுக்கட்டமைப்பும் சிறிலங்காவின் இனவாதத்தால் கேள்விக் குறியாகியுள்ளது.

நாங்கள் எமது பகுதியை அபிவிருத்தி செய்ய வேண்டுமாக இருந்தால் தமிழ்மக்கள் ஒன்றுபட்டு ஒற்றுமையுடன் எமது இறுதி இலக்கை வென்றெடுக்க வேண்டும் என்றார்.

இக்கூட்டத்தில் பட்டிப்பளைப் பிரதேச செயலாளர் க.மகேசன், பாராளுமன்ற உறுப்பினர் தகனகசபை, அரச திணைக்கள கூட்டுத்தாபன பிரதிநிதிகள், அரச, அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# துவிச்சக்கரவண்டியில் சென்றோரை மோதிய உந்துருளியின் சாரதி தப்பியோட்டம்!

## கிளி. நகரில் நேற்றுச் சம்பவம்



(அலுவலகசெய்தியாளர்)

துவிச்சக்கர வண்டியில் பயணித்தவர்களை உந்துருளி ஒன்று மோதி விட்டு தப்பிச்சென்ற சம்பவம் நேற்று முற்பகல் 9.30 மணிக்கு கிளிநொச்சி மாவட்ட வைத்திய சாலைக்கு அருகாமையில் இடம் பெற்றுள்ளது.

இச்சமபவத்தில் துவிச்சக்கரவண்டி பலத்த சேதத்திற்குள்ளாகியுள்ளது ஆயினும் துவிச்சக்கரவண்டியில் பயணித்தவர்கள் எதுவித காயமுமின்றி தப்பித்துக்கொண்டனர்.

சம்பவ இடத்திற்கு உடன் விரைந்த தமிழீழ காவல்துறை வீதிப் போக்குவரத்து கண்காணிப்பு பிரிவினர் விசாரணையினை மேற்கொண்டதுடன் தப்பியோடிய உந்துருளியையும் ஓட்டுநரையும் கண்டு பிடிப்பதற்கான நடவடிக்கையினை மேற்கொண்டுள்ளனர். (சோ)

# தேசிய அடையாளஅட்டைகளின் ஒரு தொகுதி கிடைத்துள்ளன

(அலுவலக செய்தியாளர்)

ஆட்பதிவுத்திணைக்களத்தினால் சுனாமி நடமாடும் சேவை மூலம் கிளிநொச்சி மாவட்டத்தில் நடாத்தப் பெற்ற தேசிய அடையாளஅட்டைக்கான பதிவுகளில் விண்ணப்பித்தவர்களின் ஒரு தொகுதி தேசிய அடையாள அட்டைகள் கிளி. மாவட்ட செயலகத்திற்கு வந்துள்ளன.

மேற்படி தே.அ.அட்டைகள் தரம் பிரிக்கப்பெற்று கரைச்சி, கண்டாவளை, பளை, பூநகரி பிரதேச செயலகங்களுக்கு அனுப்பிவைக்கப் பட்டு அந்தந்தப்பகுதி கிராமசேவை அலுவலர் ஊடாக உரியவர்களுக் கிடைப்பதற்கான துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதென மாவட்ட செயலகத்தினர் தெரிவித்துள்ளனர்.

மேற்படி நடமாடும் சேவை மூலம் கடந்த பெப்ரவரி 19ஆம், 20ஆம் திகதிகளில் ஆட்பதிவுத் திணைகளத்தினரால் பெற்றுக் கொள்ளப்பட்ட விண்ணப்பங்களின் பிரகாரம் இதுவரை 4243 தேசிய அடையாள அட்டைகளே வந்து சேர்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (சோ)

# அம்பாறையில் நிலவும் வரட்சியால் நெற்செய்கை பெரிதும் பாதிப்பு!

(மட்டக்களப்பு)

அம்பாறை மாவட்டத்தில் நிலவிக் கொண்டிருக்கும் காலநிலை மாற்றத்தினால் இம்முறை இந்த மாவட்டத்தில் எதிர்பார்க்கும் நெல்விளைச்சல் கிடைக்குமா? என்ற ஒரு ஐயம் விவசாயிகள் மத்தியில் ஏற்பட்டிருக்கின்றது.

இந்தப் பருவகாலத்தில் 41,300 ஹெக்ரேயர் விஸ்தீரணமுள்ள நிலத்தில் சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டது. இதன்மூலம் 169, 030 மெற்றிக்தொன் நெல் உற்பத்தியை விவசாயத்திணைக்களம் எதிர்பார்த்தபோதிலும் பருவமழை சீராக இல்லாமையினாலும், நீர்த்தேக்கங்களிலிருந்தும் வயல் நிலங்களுக்கு நீர் விநியோகம் மட்டுப்படுத்தப்பட்டதனால் எதிர்பார்க்கப்பட்ட விளைச்சலைப் பெறமுடியாத ஒரு நிலைமை ஏற்பட்டிருக்கின்றது.

மாவட்டத்தின் கரையோரப்பகுதிகளில் அதிகமான விவசாயிகள் இந்த சிறுபோக நெற்செய்கையில் ஈடுபட முடியாத ஒருநிலை சென்ற வருட பிற்பகுதியில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கும், அதனைத் தொடர்ந்து ஏற்பட்ட சுனாமிப்பேரலையின்தாக்கமும இதனால் 20 ஆயிரம் குடும்பங்கள் இன்றுவரை இடைத்தங்கல் முகாங்களிலேயே கடந்த மூன்று மாதங்களுக்கு மேல் இருந்து வருவதனால் அவர்கள் நெற்செய்கையில் ஆர்வம் காட்டவில்லை.

சுனாமி ஏற்பட்டு ஆறு மாதங்களாகின்றபோதிலும் இந்த மாவட்டத்தைப் பொறுத்தவரை உருப்படியாக எந்தவொரு திட்டமும் மேற்கொள்ளப் பட்டதாகவில்லை. கூட்டங்களும், ஆறுதல் மொழியும்தான் வழங்கப்படுகின்றது. என்று சம்பந்தப்பட்ட மக்கள் தெரிவிக்கின்றார்கள். இதேநேரத்தில் இப்பகுதியில் அறுவடை செய்த பின்பு நெல்லைச் சேமித்து வைப்பது! எங்கே என்ற பிரச்சினையும் ஏற்பட்டிருக்கின்றது. நெல் சேமித்து வைக்கும் களஞ்சியங்கள் எல்லாம் அழிந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# முல்லையில் சுனாமி நடமாடும் சேவை நடைபெறாமையால் பொதுமக்கள் அவலம்

(முல்லை)

சுனாமியினால் தமது ஆவணங்களை இழந்த முல்லைத்தீவு மக்களுக்கு நடமாடும் சேவைமூலம் வழங்குவதாகத் தெரிவித்திருந்த ஆவணங்கள் இதுவரை வழங்கப்படவில்லையென முல்லைத்தீவு மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

சுனாமி ஏற்பட்டு ஆறு மாதங்கள் கடந்த நிலையில் அதற்கான முதற் கட்டச்செயற்பாடுகளை முல்லைத் தீவு மாவட்ட அரச அதிபர் மேற் கொண்டபோதும் இதுவரை சம்பந்தப்பட்ட திணைக்களங்களினால் அதற்கான நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படாமையினால் மக்கள் தமது தேவைகளைப் பூர்த்தி செய்ய தேசிய அடையாளஅட்டை இல்லாமையினால் மக்கள் பெரும் சிரமத்தை எதிர்நோக்குவதாகவும் தெரிவிக்கபபடுகின்றது. (20)

# பாண்டியன்குளம் பிரதேசத்தில் சமகால கருத்தூட்டல் நிகழ்வு

(மல்லாவி)

பாண்டியன்குள பிரதேச அம்பாள்புர கிராமத்தில் சமகாலக் கருத்தூட் டல் நிகழ்வு கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றுள்ளது.

இந்நிகழ்வில் அம்பாள்புரம் அரசியல்துறைப் பொறுப்பாளர் ம.செந்தூரன் இன்றைய அரசியல் நிலை தொடர்பாகவும் தற்போது இடம் பெற்றுவரும் அபிவிருத்தி சம்பந்தமாகவும், மாணவர்களின் கல்வி நிலையை மேம்படுத்துவது தொடர்பாகவும் கருத்துக்களை வழங்கினார்.

தொடர்ந்து அம்பாள்புர கிராம நியாப்திட்ட இணைப்பாளர் மதனமோகன், கொல்லவிளாங்குள அ.த.க பாடசாலை முதல்வர், கொல்லவிளாங்குள கிராம அபிவிருத்திச்சங்கத்தலைவர் அம்பாள்புர கிராம அபிவிருத்திச்சங்கத்தலைவர், முல்லை. மாவட்ட அரசியல்துறைதுணைப் பொறுப்பாளர் உட்பட பலர் கலந்து கொண்டு கருத்துக்களை வழங்கினார்.

இந்நிகழ்வில் கிராமஅபிவிருத்திச்சங்கப் பிரதிநிதிகள், போராளிகள், அதிபர், ஆசிரியர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (24)

# இரண்டு நாள் வதிவிடப்பயிற்சி

புலம் பெயர்தல் தொடர்பான சர்வதேச அமைப்பின் (I.O.M.) ஆதரவுடன் தமிழர் புனர்வாழ்வுக்கழக அனுசரணையுடன் வடக்கு,கிழக்கு முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலையம் நடைமுறைப்படுததும் முதன்மையாசிரியர்களுக்கான இரண்டு நாள வதிவிடப்பயிற்சி வகுப்பு கடந்த 13,14 ஆகிய இரண்டுநாட்களிலும் முள்ளியவளை, முல்லை.அகதிகள் புனர்வாழ்வுக்கழக கூட்ட மண்டபத்தில் முள்ளியவளை பிரதேச மு.ப. அபி. இணைப்பாளர் பு.பிரதீஸ்வரி தலைமையில் இடம்பெற்றுள்ளது.

இந்நிகழ்வில் மங்கல விளக்கினை முள்ளியவளைப் பிரதேச மு.ப. க. மே. நிலைய தலைவர் தி.தங்க வேலாயுதம், விசுவமடு பிரதேச முன் பள்ளி அபிவிருத்தி இணைப்பாளர் அ.தவசீலன் ஆகியோர் ஏற்றிவைத்தனர். தேசியக்கொடியினை முல்லை. அகதிகள் புனர்வாழ்வுக் கழக இணைப பாளர் சி. சுதாகரன் ஏற்றிவைத்தார். இதில் சிறப்புரையை முல்லை. அகதிகள் புனர்வாழ்வுக்கழக இணைப் பாளர் சி.சுதாகரன் ஆற்றினார்.

# வர்த்தகர்களுக்கு உதவி

(முல்லை)

சுனாமியினால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு வர்த்தகர்களுக்கு வேள்ட் விஷன் நிறுவனம் உதவி வழங்க முன்வந்துள்ளது.

இதன் அடிப்படையில் வர்த்தகர்கள் எந்தெந்தவியாபாரம் மேற்கொண்டார்களோ அந்த அடிப்படையில் அவர்களுக்கு சுமார் 30ஆயிரம் முதல் 35 ஆயிரம் வரையான பொருட்கள் மானியமாக வழங்குவதற்கு ஏற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன இதன் முதற்கட்டமாக கடந்த வெள்ளிக் கிழமை வர்த்தகர்களுக்கான சிறப்புக் கலந்துரையாடல் நடைபெற்று நிதி வழங்குவதற்கான விபரம் சேகரிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (20)

# மகாகும்பாபிஷேகம்

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி பரந்தன் குமரபுரம் அருள்மிகு ஸ்ரீமுருகன் ஆலய மகா கும்பாபிஷேகத் திருவிழா எதிர்வரும் 24ஆம் திகதி காலை 6.30 மணி தொடக்கம் 8.30 மணிவரை நடைபெறவுள்ளது. அதற்கு முதல் நாளான 23ஆம் திகதி காலை 8.00 மணி முதல் மாலை 5.00 மணிவரை எண்ணெய்க் காப்பு நிகழ்வும் இடம்பெறவுள்ளதனால் பக்த அடியார்களை ஆலய தரிசனம் மேற்கொண்டு முருகன் அருள் பெற்றேகுமாறு ஆலயபரிபாலன சபையினர் வேண்டியுள்ளனர். (சோ)

# புனரமைக்கப்பட்ட வீதி மீண்டும் சேதமடைகிறது!

(கிளிநொச்சி)

அண்மையில் புனரமைக்கப்பட்ட இராமநாதபுரம் பழைய கண்டிவீதி மீண்டும் சேதமாகியுள்ளது. ஒரு கிலோமீற்றருக்கு மேற்பட்ட நீளமுடைய இவ்வீதியில் பாடசாலையை மையப்படுத்தி ஒரு பகுதி வீதி தார் மூலம் புனரமைக்கப்பட்டது.

ஆனால் ஒரு சில நாட்களில் மீண்டும் இவ்வீதி சேதமாகியுள்ளது. இவ்வீதியின் ஏனைய புனரமைப்புப் பணிகளும் ஸ்தம்பிதமாகியுள்ளது. எனவே இது விடயத்தில் உடனடி நடவடிக்கை மேற்கொள்ள சம்பந்தப்பட்டவர்களை கோரப்பட்டுள்ளது. (15)

# சுனாமியால் உயிரிழந்த மாணவர்களுக்கு அரையாண்டு நினைவஞ்சலி நிகழ்வு

(அலுவலக செய்தியாளர்)

சுனாமியால் உயிரிழந்த பாடசாலை மாணவர்களுக்கு அரையாண்டு நினைவஞ்சலி செலுத்தப் பட்டது.

வடமராட்சி கிழக்கு மாமுனை அ.த.க. பாடசாலையில் வெள்ளிக் கிழமை காலை 10.00 மணியளவில் பாடசாலை அதிபர் சிறிராமச்சந்திரன் தலைமையில் இந்நிகழ்வு இடம் பெற்றது.

இந்நிகழ்வின் ஆரம்ப நிகழ்வாக பொதுச்சுடரினை மருதங்கேணி கோட்டக் கல்வி அதிகாரி ரகுநாதன் ஏற்றி வைத்தார். தமிழீழ தேசியக் கொடியினை கடற்புலிகளின் மகளிர் அரசியல்துறையை சேர்ந்த கவிக்குயில் ஏற்றிவைத்தார். மாணவர்களின் படத்திற்கான ஈகச்சுடரினை மாணவர்களின் பெற்றோர்கள் ஏற்றிவைத்தார்கள். மேற்படி இந்நிகழ்வில் மாணவர்கள், பொதுமக்கள், போராளிகள், பெற்றோர்கள் எனப்பலரும் கலந்து கொண்டார்கள்.



முல்லைத்தீவு மாவட்ட அரசாங்கஅதிபர் தமிழீழ போக்குவரவுக்கழக முல்லை. மாவட்ட பேருந்துப்பகுதியினை திறந்து வைக்கின்றார் கடந்த புதனன்று இந்நிகழ்வு நடைபெற்றது. (படம்- சகிலா)

# சட்டவிரோத மண் அகழ்விற்கு எதிராக கடும் நடவடிக்கை

## -சூழல் பாதுகாப்பு அமைப்பு எச்சரிக்கை

(தென்மராட்சி)

**அறிவுறுத்தலையும் மீறி சட்டவிரோத மண் அகழ்வில் ஈடுபடுவோருக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று சூழல் பாதுகாப்பு அமைப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது.**

தென்மராட்சிப் பிரதேசத்தில் சட்டவிரோத மண் அகழ்வில் ஈடுபட்டுவந்தவர்கள் இனங் காணப்பட்டு அவர்களுக்கு இதனால் ஏற்படப்போகும் சூழல்பங்கம் குறித்தும், பாதிப்புக் குறித்தும், மண் அகழ்வால் ஏற்படப்போகும் பாதிப்புக் குறித்தும் போதிய விளங்கங் களையும், அறிவுறுத் தல்களையும் விளங்கியதற்குப் பின்னால் மண் அகழ்வில் ஈடுபட மாட்டோம் என கூறிச் சென்றவர்கள் மீண்டும், மீண்டும் சட்ட விரோத மண் அகழ்வில் ஈடுபட்டு வருவது குறித்து மக்களிடம் இருந்து ஏராளமான புகார்கள் வந்துகொண்டு இருப்பதால் எமது சூழலுக்குப் பாதிப் பை ஏற்படுத்துவோருக்கு எதிராக கடும் நடவடிக்கையினைத் தாம் எடுக்க உள்ளதாக சூழல் பாதுகாப்பு அமைப்புத் தெரிவித்துள்ளது. (28)

# நிலத்தடிநீரைப் பாதுகாக்க ஆய்வு நடவடிக்கை ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டு நிலத்தடிநீரைப் பாதுகாப்பது சம்பந்தமான ஆய்வுகளை தேசிய நீர்வழங்கல் வடிகால் அமைப்புச்சபையினர் மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த ஆய்வுப்பணிகளுக்காக ஆசிய அபிவிருத்தி வங்கி பத்துக் கோடிரூபா நிதியுதவியை வழங்கியிருக்கிறது.

யாழ்.குடாநாட்டின் நிலத்தடி நீர் மிக வேகமாக மாசடைந்து வருவதுடன், சில பிரதேசங்களில் கிணற்று நீர் மாசடைந்து குடிநீருக்குத் தட்டுப்பாடும் தோன்றியிருக்கிறது.

எனவே யாழ்.குடாநாட்டின் நிலத்தடிநீர் வளத்தைப் பேணுதல் மற்றும் குடிநீர் பிரச்சினைகளை தீர்ப்பதற்கான திட்டங்களை அமுல்படுத்துதல் போன்றவற்றை நோக்காகக் கொண்டே இந்த ஆய்வுப்பணிகள் நடத்தப்பட்டு வருகின்றன.இது பிரதேசவாரியாக இடம்பெற்று வருவதாக நீர் வழங்கல் வடிகால் அமைப்புசபை அறிவித்துள்ளது. (33)

# பொலிசாரின் வீதிச்சோதனை குடாநாட்டில் அதிகரிப்பு

(தென்மராட்சி)

யாழ்.குடாநாட்டில் சிறிலங்காப் பொலிசாரின் வீதிச்சோதனை நடவடிக்கைகள் கடந்த சில நாட்களாக அதிகரித்துள்ளன.

பல இடங்களில் பொலிசார் வாகனங்களை மறித்து ஆவணங்களை சரிபார்ப்பதுடன், உந்துருளி, முச்சக்கரவண்டி செலுத்துவோர் மீது கடுமையான கெடுபிடி நடவடிக்கைகளை மேற்கொண்டு இருப்பதாகவும், அதிகளவில் தண்டப்பணங்களைப் பொலிசார் அறவிட்டு வருவதாகவும் பொதுமக்கள் குற்றம் சுமத்தியுள்ளனர். (28)



யாழ். கோண்டாவிலில் C.B கணனி கல்வி நிறுவகத் திறப்புவிழாவில் பயிற்சிக் கூடத்தை யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி திறந்து வைப்பதையும், நிகழ்வில் பிரதமவிருந்தினராக கலந்து கொண்ட யாழ். கொக்குவில் இந்துக் கல்லூரி அதிபர் உரையாற்று வதையும் படங்களில் காணலாம்.

# வறுமைக்கோட்டிற்குக்கீழ் வாழும் மக்களுக்கு உணவல்லாத பொருட்கள் வழங்கல்

(அலுவலகசெய்தியாளர்)

திருநெல்வேலி பாற்பண்ணைப்பகுதி மக்களுக்கு தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தினரால் நேற்று முன்தினம் உணவு அல்லாத அவசியப்பொருட்கள் வழங்கப்பட்டது.

தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் வெளிநாட்டு அலுவலகங்களின் உதவியுடன் யாழ். மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தினரால் திருநெல்வேலி பாற்பண்ணைப்பகுதி வறுமைக்கோட்டிக்குக்கீழ்பட்ட மக்களுக்கு புதிய படுக்கைச்சீற, சிறுவர்களுக்கான உடைகள் தலையணை, மெத்தை, துவாய் போன்ற பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன.

இப்பொருட்களை யாழ்மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக்கழக பணிப்பாளர் ஜெயராஜ் யாழ். கோட்ட அரசியல் பொறுப்பாளர் செழியன் ஆகியோர் நேரடியாக நின்று வழங்கினர். இதில் முப்பதுக்கும் அதிகமான தமிழர் புனர்வாழ்வுக்கழகத் தொண்டர்கள் பங்குபற்றினர்.

மேற்படிபொருட்கள் இருநூறுக்கும்அதிகமான குடும்பங்களுக்கு வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (சு)

# ஆழ்கடல் மீன்பிடி அபிவிருத்திக்கு மூன்றாண்டுகள் வேலைத்திட்டம்

(மட்டக்களப்பு)

சுனாமியால் அழிந்துபோன ஆழ்கடல் மீன்பிடி நடவடிக் கைகளை மீண்டும் அபிவிருத்தி செய்வதற்கு உலகவங்கியின் அனுசரணைகளுடன் மூன்றாண்டு வேலைத்திட்டமொன்று தயாரிக்கப் பட்டுள்ளது.

கடந்த இருவாரங்களாக கடற்றொழில் அமைச்சின் அதிகாரி கள் அம்பாறை மாவட்டத்தின் கடற் பிராந்தியமான குமணை முதல் கல்லாறு வரையிலான பலவகையான ஆய்வுகள் செய்து ஆழ்கடல் மீனவர் களைச் சந்தித்துக் கலந்துரையாடி தயாரிக்கப்பட்ட செயற்பாடுகளை அமுல்செய்வதற்கு மூன்று ஆண்டுத் திட்டமொன்றை உலக வங்கயின் நிதியுதவியுடன் எதிர்வரும் ஓகஸ்ட் மாதத்தில் அமுல்செய்யப்பட விருக்கிறது.

அறுகம்பைக்குடாவில் பாரிய மீன்பிடித்துறைமுகம் ஒன்றும், இன்னும் இரு இடங்களில் மினி மீன்பிடித்துறைமுகமும், திருக்கோ விலில் கலங்கரை விளக்கமும், இளைஞர்களை ஆழ்கடல் மீன் பிடியில் ஈடுபடுத்துவதற்கான பயிற்சி நிலையமொன்றும் ஒலுவிலில் அமைக்கப்படவிருக்கிறது.

பொத்துவிலில் மாசிக் கருவாடு உற்பத்தி செய்வதற்கான ஒரு நிலையம் அமைக்கப்படும். இதற்காக மாலைதீவிலிருந்து இப்பகுதியிலுள்ள மீன் வர்களுக்கு ஒரு மாதகாலத்திற்கு மீள பயிற்சி அளிக்கக்கூடியவர்களைத் தருவிக்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

### யாழ். மாநகரசபையால் உள்ளூராட்சிவாரம்

யாழ். மாநகர சபையால் ஜூலை 11ஆம் திகதியில் இருந்து 17ஆம் திகதிவரை உள்ளூராட்சி வாரம் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

இவ்வாரத்தை முன்னிட்டு யாழ். மாநகரசபையினரால் பல வேலைத்திட்டங்கள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன. குறிப்பாக முனீஸ்வரன் வீதி முற்ற வெளியை அண்டிய பகுதிகளில் இருக்கின்ற முட்செடிகள், புல், பூண்டுகள் என்பன வெட்டி அழிக்கப்படவுள்ளன. (சு)

# சுகாதார சேவையாளர்களுக்கு மூன்று நாள் பயிற்சிநெறி

(அலுவலக செய்தியாளர்)

தியாக தீபம் திலீபன் மருத்துவசேவை நடுவப்பணியகத்தில் வடக்கு கிழக்கு பகுதிகளிலுள்ள திலீபன் மருத்துவசேவை நிலையங்களில் சேவைபுரிகின்ற சுகாதாரசேவையாளர்களுக்கான பொதுச்சுகாதார பயிற்சிநெறி தொடர்ந்து மூன்று நாட்களாக நடைபெற்றது.

இப்பயிற்சிநெறியில் ஒவ்வொரு நிலையங்களிலிருந்தும் ஒரு சேவையாளர் பங்குபற்றியுள்ளனர்.

இவர்களுக்குரிய பாடநெறிகளை மருத்துவர்கள், பொதுச்சுகாதார மாதுக்கள் வழங்கியுள்ளனர். இப்பயிற்சிநெறியினை நலவாழ்வு அபிவிருத்தி நிறுவனத்தின் ஆதரவுடன் திலீபன் மருத்துவசேவையினர் வழங்கியமை குறிப்பிடத்தக்கது. (சோ)

# ஒக்ஸ்பாம் நிறுவனத்தினால் மீனவர்களுக்கு உதவி

(மட்டக்களப்பு)

திருக்கோவில் பிரதேசத்தில் சுனாமி அனர்த்தத்தின் போது கடற்றொழில் மீன்பிடி உபகரணங்களை இழந்த மீனவர்களுக்கு அம்பாறை தமிழ் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் ஊடாக ஒக்ஸ்பாம் நிறுவனத்தினர் மீன்பிடி உபகரணங்களை வழங்கியுள்ளனர்.

திருக்கோவில் பிரதேசத்திலுள்ள விநாயகபுர மீனவர் சங்கத்துக்கு ஒக்ஸ்பாம் நிறுவனத்தினரால் நான்கு இலட்சம் பெறுமதியான மீன்பிடி இயந்திரப்படகு ஒன்றும், கீரிவலை பத்துக்கட்டும் கையளிக்கப்பட்டன.

இந்நிகழ்வில் ஒக்ஸ்பாம் திட்ட உதவியாளர் சசி, ஒக்ஸ்பாம் அபிவிருத்திக் குழுவைச் சேர்ந்தவர்கள், பிரதேச செயலாளர் கரன், சமாசத் தலைவர் துரைராசன், அம்பாறை மாவட்ட கடல்வள மேம்பாட்டுப் பொறுப்பாளர் இலக்கியன் ஆகியோர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# வாகரையில் 2000 குடும்பங்களுக்கு தற்காலிக குடிமனைகள் அமைப்பு

(மட்டக்களப்பு)

வாகரைப்பிரதேசத்தில் கடற்கோளினால் பாதிப்புக்குள்ளான சுமார் 2000 குடும்பங்களுக்கு தற்காலிக குடிமனைகளை நிர்மாணிக்கின்ற பணியில் பல அரசசார்பற்ற நிறுவனங் கள் துரிதமாகச் செயற்பட்டு வருகின்றனர்.

இந்த தற்காலிக குடிமனைகளை அமைப்பதற்குத் தேவையான கட்டடப் பொருட்களைக் கொண்டு வருவதில் படையினர் விதித்திருந்த கட்டுப்பாடு ஓரளவு தளர்த்தப் பட்டுள்ளதால் கட்டடப்பொருட்கள் பெரும் இடையூறுமின்றி கொண்டு செல்லப் பட்டு 80 சதவீதமான வேலைகள் பூர்த்தியடைந்துள்ளதாக புதிய பிரதேச செயலாளர் என.கிரிதரன் தெரிவித்துள்ளார்.

தமிழர் புனர்வாழ்வுக்கழகம், கெயார் நிறுவனம், ஐ.ஓ.எம்.எஸ்.ஓ. எஸ் எகெட் ஆகிய அரசசார்பற்ற நிறுவனங்களே இந்த வீடுகளை நிர்மாணித்து வருகின்றன.

புதிய செயலாளராக நியமிக்கப்பட்ட கிரிதரன் வாகரைப் பிரதேசத்தில் கடற்கோளால் பாதிக்கப்பட்ட சகல பகுதிகளுக்கும் சென்று அவர்களின் குறை நிறைகளைக் கேட்டறிந்து அதற்கான பரிகாரத்தையும் கண்டு வருகின்றார்.

# பரிசளிப்பு விழா

(நல்லூர்)

ஏழாலை மேற்கு சைவசன்மார்க்க வித்தியாலயத்தின் வருடாந்த பரிசளிப்பு விழா நாளை காலை 9.00 மணிக்கு அதிபர் செ.சிவநடராசா தலைமையில் பாடசாலை கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது. இந்நிகழ்வில் முதன்மைவிருந்தினராக கொழும்பு பல்கலைக்கழக புவியியல்துறை முதுநிலை விரிவுரையாளர் இரத்தினம் சிறிகாந்தனும், சிறப்பு விருந்தினர்களாக உடுவில் கல்விக்கோட்ட கல்விப்பணிப்பாளா செ.குபேரநாதனும்,உடுவில் பிரதேச செயலாளர் சி. திருவாகரனும் கலந்து கொள்ளவுள்ளனர்.

ஆசியுரையை சைவப்புலவர் கந்தசத்தியதாசன் வழங்கவுள்ளார். (41)

# நலன்புரி நிலையங்களில் மஞ்சள்காய்ச்சல் பரவுகிறது


(மட்டக்களப்பு)

திருக்கோவில் பிரதேசத்தில் மஞ்சள்காய்ச்சல் வேகமாகப் பரவி வருகின்றது. திருக்கோவில் பிரதேசத்திலுள்ள மண்டானை, தம்பட்டை, குடிநிலத்திடல் ஆகிய நலன்புரி நிலையங்களில் வசிக்கும் மக்களுக்கே இந்த மஞ்சள்காய்ச்சல் தொற்றிவருகின்றது. இதனால் இம்மக்கள் காய்ச்சல் பீடிக்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக கப்பட்டுள்ளனர்.

இதேவேளை இம்முகாம்களில் இலவச வைத்தியசேவை புரிந்துவரும பிரான்ஸ் நாட்டின் 'கெம்' நிறுவனத் தினர் இம்மக்களுக்கு ஏற்பட்டுள்ள நோய் குறித்துக் கவலை தெரிவித் துள்ளதுடன், அதற்கான சிகிச்சை அளிப்பதிலும் ஆர்வம் காட்டி வரு கின்றனர்.

இம்மஞ்சள் காய்ச்சல் அதிக உஷ்ணம் காரணமாகவே ஏற்பட்டுள்ள தாகவும், எனவே வெய்யில் நேரத்தில் வெளியே செல்ல வேண்டாம் என்றும் ஏனைய நலன்புரி நிலையங் களில் இருக்கும் மக்கள் பாதுகாப் புடன் இருக்குமாறும் "கெம்" நிறுவனத் தினர் அறிவுறுத்தி வருகின்றனர்.

# சிறுபான்மை அரசின் எதிர்காலம்...?




சிறிலங்கா அரசியலில் தவிர்க்க முடியாத சம்பவம் ஒன்று நிகழ்ந்துள்ளது. அது சனாதிபதி சந்திரிகாவின் தலைமையிலான (முன்னர்) ஐக்கிய மக்கள்சுதந்திர முன்னணியில் இருந்து முக்கிய பங்காளிக் கட்சியான ஜே.வி.பி பிரிந்துசென்றமையாகும். இது எப்போதோ நடந்து முடிந்திருக்க வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டதொன்றாகும். எனினும் அது ஒருவருடமும் ஐந்து மாதமும் கொண்டிழுக்கப்பட்டு வந்தது சந்திரிகாவுக்கும் ஜே.வி.வி யினருக்கும் இடையில் நாட்டைமுன்னேற்றும் திட்டத்திலிருந்தே கருத்து முரண்பாடுகள் காணப்பட்டுவந்தன.

இதற்கு முதலாவது காரணமாக விடுதலைப்புலிகளுடன் செய்து கொள்ள உத்தேசிக்கப்பட்ட சுனாமி மீள் கட்டமைப்புத் தொடர்பான உடன்பாடாகும் அடுத்ததாகச் சந்திரிகாவின் பொருளாதாரக் கொள்கையாகும். இவ்விரண்டு விடயங்களிலுமே ஜே.வி.பி.யினர் தொடர்ந்து முரண்பட்டு வந்தும் சனாதிபதி பொறுத்துப் பொறுத்துவந்து கொண்டே இருந்தார். காரணம் அன்று ஜே.வி.பிக்கும் சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்குமிடையில் செய்துகொள்ளப்பட்ட கூட்டுஒப்பந்தம் முகூர்த்த நாள் பார்த்து பாற்சோறும், பலகாரம் என்பன பரிமாறப்பட்டு மேளதாளங்கள் முழங்க கைச்சாத்திடப்பட்டமையாகும்.

எனினும் ஜே.வி.பி பிரிந்து செல்வதற்கான அறிவித்தலை விடுக்கும் போது இருகட்சிகளையும் கூட்டுச் சேர்க்க அரும்பாடுபட்ட அநுரா பண்டாரநாயக்கவும், மங்களசமரவீரவும் நாட்டில் இருக்கவில்லை. அவர்கள் சீனாவுக்குப் பயணமாகினர்.

சந்திரிகாவின் நாட்டை முன்னேற்றும் திட்டம்பற்றிக் கூறப்படுமிடத்து அது இரண்டு பாரிய திட்டங்களைக் கொண்டதாகும். ஒன்று சீரழிந்துள்ள நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டி எழுப்புவதாகும். இதற்காக சந்திரிகா பல யோசனைகளை வைத்தார். மின்சாரசபை, பெற்றோலியக் கூட்டு தாபனம் போன்றவற்றையும் ஏனைய சில அரச நிறுவனங்களை அவர் புனரமைப்புச் செய்வதென்ற பெயரில் தனியார் மயப்படுத்தலா கும். இரண்டாவதாக நாட்டின் இனப்பிரச்சினையையும், அதனால் ஏற்படும் யுத்தத்தையும் முடிவுக்குக்கொண்டு வருவதற்கான யோசனையாக விடுதலைப் புலிகளிடம் இடைக்கால நிர்வாகத்தைக் கையளிப்பது. இந்த இரு திட்டங்களையுமே ஜே.வி.பி யினர் எதிர்த்து வந்தனர்.

இதற்கிடையில் நாட்டின் வடக்குக் கிழக்கு உள்ளிட்ட கரையோரப் பிரதேசங்களை சுனாமிப்பேரலை அழிவுக்குட்படுத்தியது. ஆகவே இந்தப் பேரனர்த்தம் சந்திரிகாவின் இரண்டு திட்டங்களையும் பின்தள்ளி வைத்து அழிவுற்ற பகுதிகளின் புனரமைப்புத் தொடர்பில் சிந்திக்கவைத்தது. இதற்காக வெளிநாடுகள் வழங்கும் உதவிகள் தென்பகுதி போன்று வடக்குக் கிழக்குத் தமிழர் பகுதிக்கும் சென்றடைவதை உறுதிப் படுத்தும் நோக்கில் விடுதலைப் புலிகளுடன் பொதுக்கட்டமைப்பு ஒன்றை உருவாக்கச் சந்திரிகா முழுமூச்சாக ஈடுபடுவதைத் தடுத்து வந்த ஜே.வி.பியினர் தற்போது அரசிலிருந்து விலகியுள்ளனர். பல வாரங்களுக்கு முன்பாகவே இவர்கள் பொதுக்கட்டமைப்புக் கைச்சாத்திடப் பட்டால் தாம் அரசிலிருந்து விலகி விடுவதாக எச்சரிக்கை விடுத்தனர்.

இந்நாட்டின் அரசியலில் கடந்த தேர்தலில் பெரும்வாக்குகளைப் பெற்றுப் பாராளுமன்றத்துக்குத் தெரிவான இவர்கள் சமாதான முன்னெடுப்புக்களாலோ யுத்த உடன்படிக்கையினாலோ தமக்கு எவ்வித மான அரசியல் இலாபம் கிடைக்கப் போவதில்லை என்பதை உடனடியாகவே உணர்ந்து கொண்டனர்.

அதனாலேயே சந்திரிகாவின் பொதுக்கட்டமைப்புப் பிரேரணையை அவர்கள் எதிர்த்து வந்தனர் எனினும் ஜே.வி.பியின் நிரந்தரப் போட்டிக்கட்சியான ஜாதிக ஹெல உறுமயக்கட்சி மக்களை கிளர்ந்தெழச் செய்யும் வகையில் அக்கட்சியின் பிக்கு ஓமல்பே சோபித்ததேரர் சாகும் வரை உண்ணாவிரதத்தை மேற்கொண்டார். அதேவேளை மேலும் ஒருவர் கோட்டைரயில் நிலையம் முன்பாக உண்ணாவிரதமிருந்தார். ஆயினும் பெரும்பான்மை சிங்கள பௌத்த மக்களாலோ துறவிகளினாலோ இது எதிர்பார்த்த ஆதரவைப் பெறவில்லை. பதிலாக அவர்கள் மேலும் என்ன நடக்கப் போகிறது என்பதை அமைதியாக அவதானித்ததுடன், புத்த மதத்துக்கு என்ன நடக்கிறது என்பதையும் அவதானித்துவந்தனர்.

இந்த நிலையில் மேற்படி இரு தேரர்களும் தமது உண்ணாவிரதத்தைக் கைவிட்டனர். சனாதிபதி சந்திரிகா தனது பொதுக்கட்டமைப்பு விடயத்தில் மேலும் முன்னேற்றம் கண்டார்.ஓமல்பே சோபித்ததேரரின் உண்ணாவிரதம் மகாநாயக தேரரின் தலையீட்டினால் தவிர்க்கப்பட அமில தேரரின் உண்ணாவிரதம் பொலிசாரின் அதிரடி நடவடிக்கை மூலம் அவர் வைத்தியசாலைக்கு எடுத்துச் செலலப்பட்டநிலையில் கைவிடப்பட்டது.

இதற்கிடையில் கடந்த திங்களன்று வெளியான டெய்லிமிரர் பத்திரிகையில் பொதுக்கட்டமைப்பு பற்றிய தகவல் வெளியாகியிருந்தமை வியப்பாகவுள்ளது. காரணம் இது பற்றி பிரதமர் ராஜபக்ஷவிடமே சந்திரிகா தெரிவிக்காத நிலையில் யாரால் இது பிரசுரிக்கப்பட்டது என்ற வினா சில அமைச்சர்களிடம் எழுப்பியுள்ளது. எனினும் அன்று சந்திரிகா தனது கட்சி உறுப்பினர்களிடையே உரையாற்றும்போது சுருக்கமாகத் தெரிவித்தமையாக இருக்கலாம் என்றும் சிலர் கருதுகின்றனர்.

இதற்கிடையில் பொதுக்கட்டமைப்பை எதிர்க்கும் ஜாதிக ஹெல உறுமயவினரே அரசிலிருந்து ஜே.வி.பியினரை இழுத்திருக்கலாம் என்றும் கருதப்படுகிறது. அத்துடன் சில ஊடகங்கள் ஜே.வி.பியின் விலகலையடுத்து ஜாதிக ஹெல உறுமயவின் ஆதரவைப் பெற அரசு ரகசிய மாகப் பேச்சு நடத்துவதாகவும் தெரிவித்துள்ளன. சில பிக்குமார் பொதுக்கட்டமைப்பு விவகாரத்தைப் பாராளுமன்றத்துக்கு கொண்டுவரவும் அனுமதித்துள்ளனர்.

இதனைப் பாராளுமன்றத்துக்குக் கொண்டு வருவது ஐ.தே.கட்சியை வலையில் விழுத்தவும் சந்திரிகா திட்ட மிட்டுள்ளார்.

இதேவேளை ஐ.தே.கட்சி பொதுக்கட்டமைப்பைப் புலிகளுடன் கைச்சாத்திடுவதற்கு முன்பு பாராளுமன்றுக்கு கெண்டு வந்தால். பொதுக் கட்டமைப்புக்கு எதிராகவே வாக்களிக் கப்போவதாகத் தெரிகிறது. அத்துடன் ஜே.வி.பி, ஜாதிக ஹெல உறுமய போன்ற கட்சியும் எதிர்ப்பைக் காட்ட விருப்பதால் பொதுக்கட்டமைப்பு எவ் வாறு பாதுகாக்கப்படும் என்று நோக் கப்பட்டுள்ளது. இதற்கிடையில் நாளை மறுதினம் பாராளுமன்றம் கூடவிருப்பதால் வெளிநாட்டிலுள்ள அனைத்துக் கட்சி உறுப்பினர்களையும் செவ்வாய்க்கிழமைக்கு முன்பு நாடு திரும்புமாறு சந்திரிகா பணித்துள்ளார்.

அத்துடன் ஐ.தே.கட்சியும் தனது அனைத்து உறுப்பினர்களையும் செவ்வாய்க்கிழமை கொழும்பில் ஒன்று கூடுமாறு ரணில் விக்கிரமசிங்கவினால் கேட்கப்பட்டுள்ளனர்.இந்த நிலையில் அனைத்துக் கவனமும் பாராளுமன்றத்தின் பக்கம் திரும்பியிருப்பதாலும், அரசாங்கம் பெரும்பான்மை பலத்தையிழந்திருப்பதாலும் சந்திரிகா உடனடியாகப் பாராளுமன்றைக் கலைத்துவிடுவாரா என்று எதிர்பார்க்கப்பட்டுள்ளது. இது தொடர்பான கலந்துரையாடல்களும் அண்மையில் முன்னணி உறுப்பினர்களிடையே நடைபெற்றுள்ளன. ஆனால் பாராளுமன்றம் புதனன்று கூடும்போது ஜே.வி.பி.யினர் எதிர்க்கட்சிக்குத்தாவி எதிர்க்கட்சி உறுப்பினர்களின் எண்ணிக்கையை 144 ஆக அதிகரிக்கவும் எண்ணியுள்ளனர்.

கடந்த செவ்வாயன்று ஜே.வி.பி அரசிலிருந்து வெளியேறுவதாக அறிவித்த அடுத்த நாள் மகிந்த ராஜபக்ஷ ஜே.வி.பி.யுடன் சமரச பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார். அலரி மாளிகையில் நடைபெற்ற இச்சந்திப்பில் பல ஜே.வி.பி முக்கியஸ்தர்களும், சிறிலங்கா சுதந்திரக்கட்சி உறுப்பினர்களும் கலந்து கொண்டனர். இதன்போதும் ஜே.வி.பி தனது முடிவை மாற்றுவதாகத் தெரிவிக்கவில்லை. அவர்கள் வெளியேறிய பின்பு சந்திரிகா தேசிய தொலைக்காட்சியில் உரையாற்றும் போது ஜே.வி.பியின் கடந்தகால வன்முறைபற்றி குறிப்பிட்டுள்ளார். அத்துடன் ஜே.வி.பி விலகியதைத் கருத்திற் கொள்ளாது தாம் தொடர்ந்து அரசாங்கத்தைக் கொண்டுசெல்வதாகவும் தெரிவித்தார்.

இந்நிலையில் பாராளுமன்றத்தில் ஆளும்கட்சியின் பெரும்பான்மை

கேசர அபேவர்தன
(டெய்லி மிரர்)
தமிழில் வடிவேல்

எதிர்க்கட்சியிடம் செல்வதால் பல மாகாண சபைகளின் பெரும்பான்மை பலமும் கேள்விக்குள்ளாகியுள்ளது. ஆனால் சந்திரிகா பாராளுமன்றைக் கலைப்பாரா, இல்லையா என்பது அச்சமூட்டும் வினாவாகத் தோன்றியுள்ளது.

# அமைச்சரவையில் இன்று மாற்றங்கள்; அரசதரப்பு வட்டாரங்கள் தெரிவிப்பு

(கொழும்பு)

அமைச்சரவையில் இன்று பாரியமாற்றங்கள் நிகழலாம் என அரச தரப்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

ஜே.வி.பி அரசிலிருந்து விலகிச்சென்றதன்பின் இந்நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகவும், குறிப்பாக மங்களசமரவீரவின் அமைச்சர் பதவியில் பாரிய மாற்றங்கள் இருக்கலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேநேரம் ஜே.வி.பி. வசமிருந்த நான்கு அமைச்சுப் பதவிகளும், நான்கு பிரதியமைச்சு பதவிகளும் தற்சமயம் வெற்றிடமாக இருப்பதும் குறிப்பிடத்தக்கது. இந்த வகையில் ஆறுமுகம் தொண்டமான் அமைச்சரவை உயர்வு பெறுவார் என எதிர்பார்க்கப்படுகின்றது. குறிப்பாக அவருக்கு நகர அபிவிருத்தி அமைச்சு வழங்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுவதுடன் மற்றும் அரசுக்கு ஆதரவு வழங்கும் முஸ்லிம் காங்கிரஸ் மாற்றுக் குழுவினருக்கும் பிரதியமைச்சுக்கள் பதவிகள் சென்றடையலாம் என நம்பப்படுகின்றது. (32)

# சு.க.சிரேஷ்ட உறுப்பினர்கள் சனாதிபதியுடன் ஆலோசிக்க முயற்சி

## -வேட்பாளரை அறிவதிலும் ஆர்வம்

(கொழும்பு)

எதிர்வரும் சனாதிபதித் தேர்தல் சம்பந்தமாக சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் சிலர் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை விரைவில் சந்தித்து உரையாடவுள்ளனர்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் அடுத்த சனாதிபதி வேட்பாளர் யார் என்பதை அறிந்து கொள்வதற்கும், சனாதிபதித் தேர்தல் உரிய காலத்திற்கு முன்பாக நடத்தப்படுமா என்பது குறித்து அறிந்து கொள்வதற்குமாக சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் சிலர் விரைவில் சனாதிபதியைச் சந்திக்கவுள்ளதாகத் தெரியவருகிறது.




## 09.06.2005-15.06.2005

**09.**

நேபாளத்தில் படையினருக்கும் மாவோயிஸ்ட் தீவிரவாதிகளுக்குமிடையில் இடம்பெற்ற மோதலில் 23 பேர் பலி.

தென்கொரிய சனாதிபதி சோமோன் ஹெயோன் அமெரிக்கா விஜயம்.



ஆப்கானிஸ்தானில் கடத்திச் செல்லப்பட்ட இத்தாலிய நாட்டு நிவாரணப் பணியாளர் கிளெமென்டினா கென்டோனி விடுதலை.

பிரதமர் மன்மோகன்சிங் குடியரசுத் தலைவர் அப்துல்கலாமைச் சந்தித்துரையாடினார்.

எகிப்தின் அலெக்ஸான்டிரிய நகரில் அடுக்குமாடி குடியிருப்பு கட்டடமொன்று இடிந்து பாடசாலையொன்றின் மேல் விழுந்ததில் 17 மாணவர்கள் பலி ;20 இற்கும் மேற்பட்டோர் காயம்.

**10.**

பாக்தாத்தில் சியாமுஸ்லிம் பிரதேசத்தில் இடம்பெற்ற கார்க்குண்டுத் தாக்குதலில் பலர் பலி.

தென்சீனாவின் குவாங்டோங் மாகாணத்திலுள்ள ஷாண்டு என்ற ஹோட்டலில் திடீரென ஏற்பட்ட தீ விபத்தில் 31 பேர் பலி; 15 பேர் காயம்.

பிரான்ஸ் சனாதிபதி ஜாக்ஷிராக் ஜேர்மன் சனாதிபதி ஜெகாஸ்ட்டோரை சந்தித்துரையாடினார்.

**11.**

செச்சினிய தலைநகர் குரோஸ்னியை நோக்கிச் சென்று கொண்டிருந்த பயணிகள் ரயில் தண்டவாளத்தில் வைக்கப்பட்டிருந்த குண்டுவெடித்ததால் தடம்புரண்டது அதில் 12 பேர் காயமடைந்தனர்.

தமிழகம் மாமல்லபுரம் அருகே பேருந்து மீது கார் மோதியதில் இருவர் பலி.



ஈராக் தலைநகர் பாக்தாத்தில் தீவிரவாதிகள் நடத்திய வெவ்வேறு தாக்குதல்களில் ஈராக் கொமாண்டோப் படையினர் உட்பட29 பேர் பலி , 32 பேர் படுகாயம்.



ஈராக்கின் மேற்கிலுள்ள சிரிய எல்லையில் அமெரிக்கப்படையினர் நடத்திய விமானத்தாக்குதலில் 40 கிளர்ச்சியாளர்கள் பலி.

ஈராக்கில் ஐந்து மாதகாலமாக பணயக்கைதியாக சிறைவைக்கப்பட்டிருந்த பிரஞ்சு பத்திரிகையாளர் புளோரன்ஸ் அல் பீனாஸ்உம் சாரதியான ஹனூன் அல் சாதியும் விடுதலை.

இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் மூன்று நாள் பயணமாக காஷ்மீரிற்கு விஜயம் செய்து உலகின் மிக உயர்ந்த யுத்த களம் என வர்ணிக்கப்படும் சியாச்சின் பனிமலைச் சிகரத்திலுள்ள இராணுவ முகாமை பார்வையிட்டார்.



**12.**

ஐ.நா.சபையின் சீர்திருத்தம் குறித்து ஜீ.77 அமைப்புக் கூட்டத்தின் விவாதிப்பு டோஹாவில் இடம்பெற்றது.

ஈரானில் குஸெஸ்மாகாணத் தலைநகர் அஹ்வாலில் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் எட்டுப் பேர் பலி.

கென்சிங்டன் நகருக்கருகிலுள்ள மாடிவீடொன்றில் ஏற்பட்ட தீ விபத்தில் ஐந்துபேர் பலி.

**13.**

தென்அமெரிக்க நாடான சிலியின் வடக்குப் பகுதியிலுள்ள மலைப்பகுதிகளான அரிக்கா, ஆன்டாபாகஸ்டா உட்பட பல பகுதிகளில் நிலநடுக்கம் ஏற்பட்டதில் எட்டுப் பேர் உடல் நசுங்கிப் பலி.



ஈராக்கில் திக்ரித் நகரில் இடம்பெற்ற கார்க்குண்டு வெடிப்பில் 18 பேர் பலி.

காஷ்மீர் ஸ்ரீநகரில் மத்திய பொலிஸ்முகாம்மீது தீவிரவாதிகள் நடத்திய கார்க்குண்டுத் தாக்குதலில் மூன்று பொலிஸ் அதிகாரிகள் உட்பட 21 பேர் பலி; 100 பேர் காயம்.



ஆப்கானிஸ்தானின் தென்பகுதியான கந்தகாரில் அமெரிக்கா தலைமையிலான கூட்டணிப்படைகளுடனான மோதலில் கிளர்ச்சிவாதிகள் இருவர் கொல்லப்பட்டனர்.

ரஷ்ய அதிபர் விளாடிமிர் புட்டினின் தனிப்பட்ட அழைப்பை ஏற்று காங்கிரஸ் தலைவி சோனியாகாந்தி நான்குநாள் பயணமாக ரஷ்யா சென்றார்.



அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ் ,நமீபிய சனாதிபதி, மொசாம்பிக் சனாதிபதி பொஸ்வானா சனாதிபதி, நைஜீரிய சனாதிபதி, கானா சனாதிபதி ஆகியோரை வோஷிங்டனிலுள்ள வெள்ளை மாளிகையில் ஓவல் அலுவலகத்தில் சந்தித்துப் பேசியுள்ளார்.

அமெரிக்க இராணுவத்தினரால் ஈராக்கிய தீவிரவாதிகள் என்ற சந்தேகத்தின் பேரில் சிலர் கைது.

தாய்லாந்தில் முஸ்லிம்கள் செறிந்து வாழும் தென்பகுதியான நரத்திவாட் மாகாணத்தில் குண்டொன்று வெடித்ததில் ஒருவர் பலி ; மூவர் காயம்.

**14.**

அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணத்தின் வடக்குப் பகுதியில் கடலுக்கு அடியில் நிலநடுக்கம் ஏற்பட்டது. இது ரிச்டர் அளவு கோலில் ஏழு புள்ளியாகப் பதிவானது.

ஈராக்கில் இடம்பெற்ற குண்டு வெடிப்பில் 29 பேர் பலி ; பலர் காயம்.

இந்தியாவின் உத்தரப்பிரதேசம் பீகார் ஆகிய மாநிலங்களில் கடும்வெயில் காரணமாக ஆறு பேர் பலி.

தென்கிழக்கு பிரேசிலுள்ள பிரசிடண்ட்வென்சஸ்லோ பெனிட்டின்டியரி எனும் சிறைக் கூடத்திற்குள் இடம்பெற்ற சண்டையில் ஐந்து கைதிகள் பலி.

**15.**

மொஸ்கோவிலுள்ள நோசின்ஸ்ச் எனுமிடத்தில் இரு வெடிவிபத்துக்களில் இருவர் பலி.

பயங்கரவாதத்துக்கும், குற்றச் செயல்களுக்கும் எதிராக அவுஸ்திரேலியாவும், பாகிஸ்தானும் கூட்டுநடவடிக்கைகளை மேற்கொள்ளும் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டன.

# ஒரு இனம் மற்றைய இனத்தை மிதிக்கவோ, அழிக்கவோ முடியாது

*எதிர்க் கட்சித் தலைவர் ரனில் தெரிவிப்பு*

(அம்பாறை)

ஒரு இனம் மற்றைய இனத்தை மிதிக்கவோ அல்லது அழிக்கவோ தமது ஆட்சியில் எவருக்கும் இடம் கொடுக்கப்போவதில்லை என எதிர்க்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். நேற்றுமுன்தினம் அம்பாறைமாவட்டம் சம்மாந்துறை நகரமண்டபத்தில் இடம் பெற்ற கூட்டத்தில் கலந்து கொண்ட அவர் அங்கு உரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

மூவினங்களும் இணைந்து கருத்தொருமித்து முடிவுகளை முன் வைத்தால் மட்டுமே நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்த முடியும் .

இந்த நிலையில் சமாதான உடன்படிக்கையில் முஸ்லிம்களைப் புறம் தள்ளியதாக பலர் கூறுகின்ற போதும் இலங்கையின் தீர்வு முயற்சிகளில் முஸ்லிம்களின் பங்களிப்பையும் ஆலோசனைகளையும் ஆரம்பத்தில் இருந்தே ஐக்கிய தேசியக் கட்சியே வலியுறுத்தி வருவதாகத் தெரிவித்தார்.

இந்த வகையில் சுனாமியால் கடுமையாகப் பாதிக்கப்பட்ட முஸ்லிம் மக்களதும் வாழ்வை மேம்படுத்துவதற்கும் ஏற்புடையதான ஒரு அமைப்பையே ஐக்கியதேசியக்கட்சி ஏற்படுத்துவதோடு கிழக்கை முழுமையாக விருத்திசெய்வதே தமது நோக்கம் எனவும் தெரிவித்துள்ளார். (32)

# தேர்தல் நடத்தப்படமாட்டாது: சனாதிபதியின் பேச்சாளர் நம்பிக்கை

ஜே.வி.பி. அரசாங்கத்தைவிட்டு விலகியதால் பாராளுமன்றத்தில் அரசாங்கம் பெரும்பான்மையை இழந்துள்ள போதிலும் இந்த நேரத்தில் பொதுத் தேர்தலொன்றிற்குச் செல்லத் தேவையில்லை என்பதே சனாதிபதியின் கருத்தென சனாதிபதியின் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

சமாதானத்திற்காகப் பாடுபடுமாறு மக்கள் இரு தடவைகள் சனாதிபதித் தேர்தல்களினூடாக சனாதிபதிக்கு ஆணை வழங்கியுள்ளனர்.

மக்கள் வழங்கிய அந்த ஆணைக்கமைய செயற்பட சனாதிபதி தீர்மானித்துள்ளார் எனவும், சனாதிபதியின் ஊடகப் பேச்சாளரும், நிவாரண புனர்வாழ்வு மற்றும் புனரமைப்புப் பணிப்பாளர் நாயகமுமான ஹரீம் பீரிஸ் தெரிவித்துள்ளார்.

1999ஆம் ஆண்டு நடைபெற்ற சனாதிபதித் தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவையும், ஜே.வி.பி யின நந்தன குணதிலக்கவையும் மக்கள் தோற்கடித்து சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை வெற்றிபெறச் செய்தனர் எனவும் ஹரீம்பீரிஸ் சுட்டிக்காட்டினார்.

சனாதிபதி அதிகாரம் இருக்கையில் பாராளுமன்றத்தில் சிறுபான்மை அரசாங்கமொன்றைக் கொண்டு நடத்த முடியும் என்பதே சனாதிபதியினதும், அரசாங்கத்தினதும் கருத்தாகும்.

அரசாங்கத்தைக் கவிழ்த்து ஐக்கிய தேசியக் கட்சியும், ஜே.வி.பியும் தேர்தல் ஒன்றிற்கு செல்ல முயன்றால் மாத்திரமே அரசாங்கம் வீழும் எனவும் ஹரீம்பீரிஸ் மேலும் தெரிவித்துள்ளார்.

# பொதுக்கட்டமைப்பு யோசனையை பாராளுமன்றில் நிறைவேற்று சனாதிபதியால் கூட சமர்ப்பிக்க முடியாது!

**-ஓமல்பே சோபித்ததேரர் தெரிவிப்பு**

நிறைவேற்று அதிகாரங்களை கொண்ட சனாதிபதியால் கூட பொதுக் கட்டமைப்பு யோசனையை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க முடியாது. இவ்வாறு ஹெல உறுமய கட்சியின் பொதுச் செயலாளரும் எம்.பியுமான கலாநிதி ஓமல்பே சோபித்ததேரர் தெரிவித்தார்.

பொதுக்கட்டமைப்பு யோசனையை வாபஸ் பெறுமாறுகோரி கண்டி தலதாமாளிகையில் உண்ணாவிரதமிருந்த கலாநிதி சோபித்த தேரர் தொடர்ந்து தெரிவிக்கையில், நாட்டின் இறைமைக்கும் ஐக்கியத்திற்கும், விரோதமான எந்தச் சட்டத்தையும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க முடியாது என அரசியலமைப்புச் சட்டத்தின் 154 ஆவது சரத்து கூறுகிறது.

சனாதிபதி பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கவுள்ள உத்தேச பொதுக் கட்டமைப்பு யோசனை அரசியலமைப்பு சட்டத்தின் 154 ஆவது சரத்திற்குஎதிரானது.நாட்டின் இறைமை , ஐக்கியத்தை பாதிக்கும் பிரேரணைகளையும் சபையில் சமர்ப்பிக்க முடியாது என அரசியலமைப்பு சட்டத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# பணிநிலை வேண்டுகை

## தமிழீழ நிர்வாகசேவை
## தமிழீழம்

தமிழீழ நிர்வாகசேவையின் சமூக அபிவிருத்தி வேலைத்திட்டத்திற்கு ஆளணி சேர்த்துக்கொள்ளப்படவிருப்பதனால் கீழ்காணும் தகைமை உடையவர்கள் விண்ணப்பிக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

### கல்வித் தகைமை:-

க.பொ.த சாதாரண தரப்பரீட்சையில் தமிழ் பாடத்தில் திறமைச் சித்தியுடன் கணித பாடம் உட்பட ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். அல்லது க.பொ.த. உயர்தரப்பரீட்சையில் மூன்று பாடங்களில் சித்தியடைந் திருத்தல்வேண்டும்.

### குறிப்பு:-

கூட்டுறவுப்பயிற்சி நெறி, நிலஅளவையியல் பாடநெறி, கணக்கியல் சார்ந்த பாடநெறி, திணைக்களம்/நிறுவனங்களில் பணிபுரிந்தமைக்கான சான்றிதழ்கள் இருப்பின் முன்னுரிமை அளிக்கப்படும்.

### வயதெல்லை:-

20 தொடக்கம் 30 வயதிற்கு இடைப்பட்டவராக இருத்தல்வேண்டும்

### சம்பளம்:-

சகல பணிநிலைகளிற்கும் அவரவர் கல்வித்தகைமைகளுக்கும், அனுபவத்திற்கு ஏற்ப நேரில் பேசி தீர்மானிக்கப்படும்.

விண்ணப்பங்கள் யாவும் சுயமாக தயாரிக்கப்பட்டு கல்வித்தகைமையின் நிழற்பிரதியுடன் 30.06.2005இற்கு முன் கிடைக்கக்கூடியவாறு கீழ் காணும் முகவரிக்கு நேரிலோ அல்லது தபால் மூலமோ அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.

முகவரி ☞

ஆளணிப்பகுதி,
தமிழீழ நிர்வாக சேவை,
நடுவப்பணியகம்,
155ஆம் கட்டை,
பாரதிபுரம்,
கிளிநொச்சி.

(சி-12219)

# காணிபற்றிய முக்கிய அறிவித்தல்

*கீழே குறிப்பிடப்படும் நடவடிக்கைகள் 2005. 06. 30 ஆம் நாள் முதல் செயற் படுத்தப்படவுள்ளதென்பதைச் சகலரினதும் கவனத்திற்கு அறியத்தருகின்றோம்*

01 காணித்தேவைக்காகக் காடுகளை அழிப்பதும், பற்றைக்காடுகளை வெட்டுவதும் முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளது.

02 காணி வழங்கப்பட்டு நீண்ட காலமாக அபிவிருத்தி செய்யாது, உரிமையாளரும் இங்கு இல்லாது, பயன்படுத்தப்படாதிருக்கும் காணியினை அத்துமீறிப்பிடித்து ஆட்சி செய்வதோ, உறுதிப்படுத்தப்பட்ட ஆவணம் இல்லாது உறவினர் ஆட்சி செய்வதோ முற்றாகத் தடை செய்யப்படுகின்றது.

03 2இல் காட்டப்பட்ட காணி தொடர்பில் எவரும் தற்போது இருப்பாரேயானால் அவர் தமிழீழ நிர்வாகசேவை நடுவப்பணியகம். பாரதிபுரம், கிளிநொச்சியில் அமைந்துள்ள செயலகத்துடன் தாமதமில்லாது தொடர்புகொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

04 பொதுத்தேவைக்கென ஒதுக்கப்பட்ட காணிகள், நீர்ப்பாசன குளப்படுக்கைகளுக்கென ஒதுக்கப்பட்ட காணிகள், கழிவ வாய்க்கால்கள், வீதிகள் என்பவற்றுக்கு ஒதுக்கப்பட்ட காணிகளை எவராவது அத்மீறிப் பிடிப்பது முற்றாகத் தடைசெய்யப்படுகின்றது. அத்துமீறிப்பிடித்து ஆட்சிசெய்து வந்தால் அக்காணிகளை உரிய தேவைக்காக மீள சுவீகரிப்புச் செய்யப்படும்.

05 4 இல் காட்டப்பட்டுள்ள காணி தொடர்பில் ஏதாவது காணியினை அத்துமீறிப் பிடித்து ஆட்சிசெய்து வருவாரேயானால் அவர்கள் தாம் பிடித்து வைத்துள்ள காணி தொடர்பான விபரத்துடன் தமிழீழ நிர்வாக சேவை. நடுவப்பணியகம், பாரதிபுரம், கிளிநொச்சியில் அமைந்துள்ள செயலகத்துடன் தாமதம் இன்றி தொடர்புகொள்ளும்படி கேட்டுக்கொள்ளப் படுகின்றனர்.

06 இராணுவ நடவடிக்கை காரணமாக இடம்பெயர்ந்து அரச காணிகளைத் துப்புரவு செய்து வசித்து வந்த குடும்பங்கள் மீள தமது இருப்பிடங்களுக்குச் சென்றதும், அக்காணிகளை தற்போது வேறு நபரால் ஆட்சிப்படுத்தவோ, அல்லது அபிவிருத்தி செய்யவோ முடியாது. அக்காணி பொதுத்தேவைக்காக எடுக்கப்படும்.

07 மேலே காட்டப்பட்ட நடவடிக்கைகளுக்கு கீழ்ப்படியாது அதனை மீறி செயற்படுபவர்கள் மீது தமிழீழ காவல்துறை மூலம் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தமிழீழ நிர்வாகசேவை,
நடுவப்பணியகம்,
தமிழீழம்.

(சி.12218)

# பொதுக்கட்டமைப்பு விடயத்தில் ஜே.வி.பி யின் முடிவில் மாற்றமில்லை

(கொழும்பு)

பொதுக்கட்டமைப்பு விடயத்தில் ஜே.வி.பி யின் முடிவில் எந்தவிதமான மாற்றங்களும் இல்லை. இந்தப் பொதுக்கட்டமைப்பை எந்தவகையிலாவது இல்லாமல் செய்வதே தற்போது ஜே.வி.பி யின் நோக்கம் என ஜே.வி.பி யின் தரப்பு தெரிவிக்கின்றது.

இந்நிலையில் எதிர்வரும் நாட்களில் பொதுக்கட்டமைப்பு பிரேரணை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டால் அதைத் தோல்வியடையச் செய்யும் நடவடிக்கைகளின் ஒரு கட்டமாகவே இந்த ஐ.தே.க வுடனான சந்திப்பின் நோக்கம் என தெரிவிக்கப்படுகின்றது.

ஜே.வி.பி வெளியிட்டுள்ள கருத்தில் இந்த பொதுக்கட்டமைப்பை பாராளு மன்றத்தில் தோற்கடிக்க ஐக்கிய தேசியக்கட்சி உதவுமேயானால் எதிர்வரும் சனாதிபதி தேர்தலில் தாம் யாரையும் வேட்பாளராக நிறுத்தப்போவதில்லை என தெரிவித்துள்ளது. எனினும் இது குறித்து இதுவரை ஐக்கிய தேசியக் கட்சி எந்தப் பதிலையும் வெளியிடவில்லை. (32)

# சேரன் வாணிபம்

## பணிநிலை வேண்டுகை

பணிநிலை - பாரவூர்தி உதவியாளர்

தகைமைகள் -
* 35 வயதிற்குட்பட்டவராக இருத்தல் வேண்டும்.
* ஆண்டு 08 வரை கல்வி கற்றிருத்தல் வேண்டும்.
* நல்ல தேகாரோக்கியம் உடையவராக இருத்தல் வேண்டும்.
* வன்னிப்பகுதியில் நிரந்தரமாக வசிப்பவராக இருத்தல் வேண்டும்.

சம்பளம் - நேரில் பேசித்தீர்மானிக்கப்படும்.

மேற்படி தகைமைகளையுடையோர் தமது சுயவிபரங்களுடன், குடும்பப்பதிவு அட்டை, பிறப்புச்சான்றிதழ், அடையாள அட்டை, பயண அனுமதி அட்டை என்பவற்றுடனும், அவற்றின் நிழற்பிரதிகளுடனும் 22.06.2005 ஆம் நாள் புதன்கிழமை காலை 10.00 மணிக்குக்கீழ்க்காணும் முகவரிக்கு நேரில் சமுகம் தருமாறு வேண்டப்படுகின்றீர்கள்.

நடுவப்பணிமனை,
சேரன் வாணிபம்,
யாழ்.வீதி,
கிளிநொச்சி.

(சி.12220)

# மு/புதுக்குடியிருப்பு ப.நோ.கூ.சங்கம் (வ.து) கிளைப்பொதுச்சபைக் கூட்டம். 2005.06.21

புதுக்குடியிருப்பு ப.நோ.கூ.சங்கத்தின் கீழ்வரும் 09 கிளைகளுக்குமான கிளைக்குழு, மகளிர்குழு, பொதுச்சபை பேராளர் தெரிவு செய்வதற்கான கிளைப்பொதுச்சபைக் கூட்டம் எதிர்வரும் 2005.06.21ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 9.00 மணிக்கு கீழ்க்குறிப்பிடப்படும் விபரப்படி நடைபெறும். இவ் அறிவித்தலை ஒவ்வொரு வாக்களிக்க தகைமையுடைய உறுப்பினரும் தமக்கான சொந்த அறிவித்தலாகக் கருதி தவறாது சமுகம் கொடுத்து கிளைக்குழு உறுப்பினர்களையும், பொதுச்சபை பேராளர்களையும் தெரிவுசெய்ய ஒத்துழைப்பு வழங்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

| கிளை இல. | கிளையின் பெயர் | தலைமைதாங்கும் உத்தியோகத்தர் | கிளைப் பொதுச் சபைக் கூட்டம் நடைபெறும் இடம். |
|---|---|---|---|
| 01. | புதுக்குடியிருப்பு மேற்கு | க. சதீஸ்வரன் | புது.ஸ்ரீசுப்பிரமணிய வித்தியாலயம். |
| 02. | புதுக்குடியிருப்பு கிழக்கு | சி.சிவகரன் | புது.ஸ்ரீசுப்பிரமணிய வித்தியாலயம். |
| 03. | புனித சூசையப்பர் | சி.குலேந்திரன் | புது.றோ.க. வித்தியாலயம். |
| 04. | ஆனந்தபுரம் | கு.உதயகுமார் | ஆனந்தபுரம்அ.த.க பாடசாலை. |
| 05. | இரணைப்பாலை | சி.வசீகரன் | இரணைப்பாலை மகாவித்தியாலயம் |
| 06. | தேவிபுரம் | வ.நிருபாகரன் | தேவிபுரம் அ.த.கபாடசாலை . |
| 07. | உடையார்கட்டு | ச.சசீந்திரன் | உடையார்கட்டு -மகாவித்தியாலயம் |
| 08. | சுதந்திரபுரம் | சு.ரஜீந்திரன் | சுதந்திரபுரம் அ.த.க பாடசாலை. |
| 09. | வள்ளிபுனம் | ச.பாலகிருஸ்ணன் | வள்ளிபுனம் கனிஷ்ட உயர்தர வித்தியாலயம். |

*திரு. த. பத்மானந்தன்,*
*தேர்தல் உத்தியோகத்தர்,மு/புதுக்குடியிருப்பு.*
*ப. நோ. கூ. சங்கம்.*

(சி.12039)

# அடுத்தமாதம் முதல்வாரமளவில் சேது சமுத்திரத்திட்ட அடிக்கல்நாட்டுவிழா

### - மதுரையில் நடைபெறும் என்கிறார் - டி.ஆர். பாலு

சேது சமுத்திரத் திட்டத்துக்கு மதுரையில் அடுத்த மாதம் முதல் வாரமளவில் அடிக்கல் நாட்டப்படுகிறது இதில் இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங், சோனியாகாந்தி, கருணாநிதி ஆகியோர் பங்கேற்பார்கள் என்று இந்திய மத்திய அமைச்சர் டி.ஆர். பாலு அறிவித்தார்.

மத்திய அமைச்சர் டி.ஆர். பாலு மதுரையில் நேற்று முன்தினம் நிருபர்களுக்கு பேட்டியளித்தபோது அவர் கூறியதாவது;

தமிழர்களின் 145 ஆண்டு கால கனவு திட்டமான சேது சமுத்திரத் திட்டம் நனவாக நிறைவேற இருக்கிக்கிறது. இதனை சுமார். ரூபா இரண்டாயிரத்து நானூறு கோடி மதிப்பீட்டில் மத்திய அரசு நிறைவேற்றுகிறது வரலாற்று சிறப்புமிக்க இந்தத் திட்ட தொடக்கவிழா மதுரையில் நடத்தப்படும்.இத்திட்டத்துக்கு பிரதமர் மன்மோகன்சிங் அடிக்கல் நாட்டுகிறார் காங்கிரஸ் தலைவர் சோனியாகாந்தி, தி.மு.க. தலைவர் கருணாநிதி மத்திய நிதி அமைச்சர் ப.சிதம்பரம், மற்றும் தலைவர்கள் பங்கேற்கிறார் கள். முதல்வர் ஜெயலலிதாவுக்கு சேது சமுத்திரத்திட்ட தலைவரான தூத்துக்குடி சபை தலைவர் நேரில் அழைப்பு கொடுப்பார்.

மூன்று ஆண்டில் அதாவது 2008 இல் திட்டப்பணி நிறைவடையும், கலைஞர் முதல் அமைச்சர் பதவியில் இருக்கின்ற காலகட்டத்தில் சேதுசமுத்திர கால்வாயில் கப்பல் போக்குவரத்து தொடங்கும் என்பதையும் மிகுந்த மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

இதன் மூலம் தொண்டி,நாகை, மசூலிபட்டினம்,குளச்சல் ஆகிய நான்கு துறைமுகங்கள் வளர்ச்சி அடையும் எனவும் டி.ஆர். பாலு தெரிவித்தார்.



இந்திய கிரிக்கெட் அணி முன்னாள் தலைவர் பட்டோடி நவாப் மான்வேட்டை ஆடிய குற்றத்துக்காக பொலிசாரால் தேடப்பட்டு வந்தார். இந்நிலையில் நேற்று முன்தினம் அவர் நீதிமன்றில் சரணடைந்தார்.

# 'ஆகாஷ்' வெற்றிகரமாகச் சோதிக்கப்பட்டது

இந்தியாவின் அதிநவீன ஆகாஷ் ஏவுகணை சோதனை வெற்றிகரமாக நடந்தது. இந்தியாவில் அதிநவீன ஏவுகணையான 'ஆகாஷ்' கடந்த வியாழன் ஒரிஷா மாநிலம் சண்டிப்பூரில் வெற்றிகரமாகச் சோதனை செய்யப்பட்டது. தரையில் இருந்து விண்ணில் உள்ள இலக்கைத் தாக்கும் இந்த ஏவுகணை அமெரிக்காவில் 'பாட்ரியாட்' ஏவுகணையை விட அதிக சிறப்பு அம்சங்கள் கொண்டது என்று இந்திய இராணுவ வட்டாரங்கள் தகவல் தெரிவித்துள்ளது. இந்த ஏவுகணை 25 கி.மீ தூரம்வரை பாய்ந்து சென்று தாக்கும் சக்தி கொண்டதாகும்.



இந்திய மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் நட்வர்சிங் நோர்வே நாட்டில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளார். நேற்று முன்தினம் அவர் அந்நாட்டு பிரதமர் கெஜல்மேக்னி போண்டிவிக்கை சந்தித்தபோது.

# பா.ஜ வில் ஒற்றுமை இல்லை என்கிறார் அதன் பொதுச்செயலாளர் பிரமோத்மகாஜன்

பா.ஜ வில் ஒற்றுமை இல்லை என்று பா.ஜ.பொதுச் செயலாளர் பிரமோத் மகாஜன் கூறியுள்ளார்.

பா.ஜ.தலைவர் அத்வானி சமீபத்தில் பாகிஸ்தான் சென்றிருந்த போது ஜின்னா பற்றி அவர் கூறிய கருத்துக்கள் பா.ஜ.வுக்குள் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தின. அப்போது அத்வானிக்கு எதிராக கட்சிக்குள்ளேயே கடும் அதிருப்தி எழுந்தது.

இது குறித்து பா.ஜ. பொதுச் செயலாளர் பிரமோத் மகாஜன் நேற்று முன்தினம் கூறியதாவது;

பா.ஜ.கட்சியை இந்திய கிரிக்கெட் அணிக்கு ஒப்பாகக் கூறலாம். கிரிக்கெட் அணி வீரர்கள் தங்களது தனிப்பட்ட திறமைகளை வெளிப்படுத்தி ஆட முயற்சிக்கும்போது அந்த அணி தோல்வியைத் தழுவும் அதேபோன்ற நிலை பா.ஜ.விலும் காணப்படுகிறது. பா.ஜ.வில் இரண்டாம் கட்ட தலைவர்கள் தலைமைப் பதவிக்கு கடும் போட்டா போட்டியிடுகின்றனர். இதனால் பா.ஜ.வில் ஒற்றுமைஇல்லாத சூழ்நிலைக்காணப்படுகிறது எனவே பா.ஜவினர் அனைவரும் என்னையும் சேர்த்து ஒரே அணியாக செயற்படவேண்டும் அப்போது தலைமை பதவிக்கான போட்டி முடிவுக்கு வரும் கட்சி வளர்ந்தால் நாமும் அதோடு சேர்ந்து வளரலாம்.

பத்திரிகைகள் பா.ஜ.வில் அதிகார போட்டி நடைபெறுவதாக சர்ச்சையை கிளப்பி வருகின்றன. நெருப்பு இல்லாமல் புகையாது. பிரச்சினை இருக்கிற காரணத்தால்தான் பத்திரிகைகள் இவ்வாறு எழுதுகின்றன. எனவே இரண்டாம் கட்ட தலைவர்கள் ஒன்றாக செயற்பட்டு பிரச்சினைக்கு முடிவு காணவேண்டும். என்றார். அவர். .

# அத்வானியின் பதவியை பறிக்க இந்துசாமியார்கள் முயற்சி

அத்வானியின் எம்.பி பதவியை பறிப்பதற்கு எதிரான கமிட்டியை இந்து சாமியார்கள் அமைத்துள்ளனர்.

முகமது அலி ஜின்னாவை அத்வானி பாராட்டிப்பேசிய பிரச்சினை இன்னும் ஓய்வதாகத் தெரியவில்லை. அத்வானியை எப்படியாவது பா.ஜ. தலைவர் பதவியில் இருந்து நீக்க வேண்டும் என்பதில் விசுவ இந்து பரிஷத் தீவிரமாகவுள்ளது. இந்த நிலையில் அந்த அமைப்புக்கு ஆதரவாக செயற்படும் சாமியார்கள் அகமதாபாத் நகரில் அத்வானிக்கு எதிராக புதிய அமைப்பு ஒன்றை ஆரம்பித்துள்ளனர். குஜராத் முழுவதும இருந்து திரண்ட சாமியார்கள் அந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டனர். ஜின்னாவை பகழ்ந்து பேசிய அத்வானியை காந்திநகர் மக்களவை தொகுதி எம்.பி. பதவியில் இருந்து எப்படியாவது இராஜினாமா செய்ய வைக்கவேண்டும் என்பதே இந்த அமைப்பின் குறிக்கோள் ஆகும். இதற்காக அந்தத் தொகுதியில் வீடு வீடாகச் சென்று பிரசாரம் செய்ய சாமியார்கள் முடிவுசெய்துள்ளனர்.

# கழுகுடன் மோதி விமானவிபத்து பயணிகள் உயிர்தப்பினர்

இந்தியமத்திய பிரதேசம் இந்தூரில் இருந்து கிளம்பிய பயணிகள் விமானத்தை இரா்ட்சத கழுகு தாக்கியது விமானத்தை நிறுத்த விமானி முயற்சித்ததால் சக்கரத்தின் ரையர் வெடித்து சிதறியது ஆனாலும் விமானத்தில் இருந்த 38 பயணிகளும் அதிர்ஷ்டவசமாக உயிர்தப்பினார்கள்.

இந்தூர் விமான நிலைய ஓடுபாதையில் விமானம்சென்று கொண்டிருந்தபோது பறந்து வந்த ராட்சத கழுகு விமானத்தைத் தாக்கியது.

அதைத்தொடர்ந்து விமானத்தை உயரகிளம்பாமல் ஓடுபாதையில் விமானி அவசரமாக நிறுத்தினார். அதில் ஓடுபாதையில் உரசிச் சென்றசக்காரங்களில் ரயர்களில் ஒன்று வெடித்துச் சிதறியது விமானம் ஒரு குலுங்கலுடன் ஓடு பாதையில் நின்றது.

உடனடியாக அதில் இருந்த 38 பயணிகளும் கீழே இறக்கப்பட்டனர். அவர்கள் அனைவரும் காயமின்றி உயிர்தப்பினார்கள்.

# மத்திய மந்திரிசபை மாற்றியமைக்கப்படும்

இந்திய மத்திய மந்திரிசபை வரும் 23 ஆம் திகதி விஸ்தரிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

மத்தியில் பிரதமரான மன்மோகன்சிங் தலைமையிலான ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு பதவி ஏற்று 13 மாதங்கள் ஆகின்றன. இந்த நிலையில் பிரதமர் மன்மோகன்சிங் தனது மந்திரிசபையை மாற்றியமைக்கத் திட்டமிட்டுள்ளார். இந்த நிலையில் ஐக்கிய முற்போக்குக் கூட்டணியின் முககியகுழுச் கூட்டம் நேற்று முன்தினம் மாலை நடைபெற்றது. மந்திரிசபை விஸ்தரிப்பு பற்றி இந்தக்கூடடத்தில் ஆலோசிக்கப்படடதாக அறியப்படுகிறது.

# முஸ்லிம்களுக்கு தனி இட ஒதுக்கீடு ஆந்திர அரசுக்கு பா.ஜனதா எதிர்ப்பு

ஆந்திர அரசாங்கம் முஸ்லிம்களுக்குத் தனி இட ஒதுக்கீடு செய்ய முடிவு செய்திருப்பதற்கு பா.ஜனதா எதிர்ப்புத் செரிவித்துள்ளது.

ஆந்திராவில் முதல்-மந்திரி ராஜசேகரரெட்டி தலைமையில் காங்கிரஸ் ஆட்சி நடந்து வருகிறது. ஆந்திராவில் முஸ்லிம்களுக்கு ஐந்து சதவீத இட ஒதுக்கீடு வழங்க அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

ஆந்திர அரசின் இந்த முடிவுக்கு பா.ஜனதா எதிர்ப்புத் தெரிவித்துள்ளது. இது குறித்து டில்லியில் நேற்று முன்தினம் பா.ஜனதா செய்தித் தொடர்பாளர் பிரகாஷ் ஜவாத்கர் கூறியதாவது: "ஆந்திர அரசு முஸ்லிம்களுக்குத் தனி இட ஒதுக்கீடு வழங்குவது தேசிய ஒற்றுமை உணர்வுக்கும், பிற்படுத்தப்பட்ட மக்களின் நலனுக்கு எதிரானது. முஸ்லிம்களை பிற்பட்டோர் பட்டியலில் சேர்ப்பதை தேசிய அளவிலும், மாநில அளவிலும், அமைக்கப்பட்ட பல்வேறு அமைப்புக்கள் நிராகரித்துவிட்டன.

எனவே சமூகப்பொருளாதாரம், கல்வி ஆகியவை அடிப்படையில் தான் பிற்பட்டோர் இட ஒதுக்கீடு இருக்க வேண்டும். சமய அடிப்படையில் இருக்கக் கூடாது எனவும் பா.ஜ தெரிவித்துள்ளது.


MÉDECINS DU MONDE

**MDM** French NGO working on rehabilitation program on Mallavi Hospital is looking for two drivers for the association

- Experience needed in driving and car maintenance
- Familiar with the Vanni and crossing of the border in Vavunia
- Knowledge needed in English or English and Singhalese

Job available immediately, one month trial period followed by a signed contract with monthly salary.
If interested please send contact address along with CV/references to MDM (Medecins dumonde). Mallavi

(5939)



## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

### நாட்டுப்பற்றாளர்

## சதா தனபாலசிங்கம்

22.05.2005 இல் சாவடைந்த எமது குடும்பத் தலைவரின் மரணச்செய்தி கேட்டு உடன் வந்து உதவியவர்களுக்கும், மரணச்சடங்கிலும், இறுதி ஊர்வலத்திலும் கலந்துகொண்டு அனுதாபம் தெரிவித்து எமக்கு ஆறுதல் அளித்தவர்களுக்கும், மற்றும் நேரிலும், தொலைபேசி மூலமும், வேறு வழிகளிலும் அனுதாபம் தெரிவித்த அன்பர்களுக்கும், உற்றார்,உறவினர்களுக்கும், போராளிகளுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம். அன்னாரின் 31 ஆம் நாள் நினைவு அஞ்சலி நிகழ்வு 21.06.2005 செவ்வாய்கிழமையன்று சிவிக்ஸ் சென்ரர்,வட்டக்கச்சியில் அவரது இல்லத்தில் நடைபெறும் என்பதை உற்றார், உறவினர்கள், நண்பர்கள், அன்பர்கள் அனைவருக்கும் அறியத்தருவதோடு, இந்நிகழ்வில் அனைவரையும் பங்கு பற்றுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தகவல்:-

மனைவி, மகள்,

739,சிவிக்ஸ் சென்ரர்,
வட்டக்கச்சி.

(சி-12216)

# உலக சம்பியனை வீழ்த்தியது பங்களாதேஷ்
# அஸ்ரபுல் சதத்தில் அசந்தது அவுஸ்திரேலியா!




அஷ்ரபுல் அசத்தல் சதம் அடிக்க... கிலெஸ்பி பந்தில் அப்தாப் சிக்சர் அடிக்க, முத்தரப்பு ஒரு நாள் கிரிக்கெட் தொடரில் உலக சம்பியன் அவுஸ்திரேலியாவை ஐந்து விக்கெட் வித்தியாசத்தில் வீழ்த்தியது பங்களாதேஷ்.

அவுஸ்திரேலியா, இங்கிலாந்து, பங்களாதேஷ் அணிகளுக்கிடையிலான நட்வெஸ்ட் முத்தரப்பு ஒரு நாள் கிரிக்கெட் தொடர் இங்கிலாந்தில் நடந்து வருகிறது. கார்டிப் நகரில் நேற்று முன்தினம் நடந்த லீக் போட்டியில் உலக சம்பியன் அவுஸ்திரேலியா, பங்களாதேஷ் அணிகள் மோதின. முதலில் துடுப்பாடிய அவுஸ்திரேலிய அணிக்கு தொடக்கமே மோசமாக அமைந்தது. பைஸ்யா வீசிய ஆட்டத்தின் இரண்டாவது பந்தில் கில்கிறிஸ்ட் டக்கில் ஆட்டமிழந்தார். தலைவர் பொண்டிங் ஒரு ஓட்டத்துடன் வெளியேறினார். ஹைடன் 37 ஓட்டத்துடன் ஆட்டமிழந்தார். அவுஸ்திரேலிய அணி மூன்று விக்கெட் இழப்பிற்கு 57 ஓட்டங்களுடன் திணறியது. இந்நிலையில் மார்ட்டின், கிளார்க் இணைந்து அணியை மீட்டனர்.

இந்த ஜோடி 108 ஓட்டம் சேர்த்த நிலையில் கிளார்க் 54 ஓட்டங்களில் வெளியேறினார். அதிக பட்சமாக மார்ட்டின 77 ஓட்டம் எடுத்தார். கடைசி நேரத்தில் ஹூசே (31) கேடிச் (36) விரைவாக ஓட்டம் குவிக்க அவுஸ்திரேலிய அணி 50 ஓவரில் ஐந்து விக்கெட் இழப்பிற்கு 249 ஓட்டம் எடுத்தது. சிறப்பாகப் பந்து வீசிய பைஸ்யா மூன்று விக்கெட்டைக் கைப்பற்றினார். அடுத்து துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி ஓமர் (19), நவீஸ் இக்பால் (08), துஷார்கான் (24) விக்கெட்டுக்களை விரைவில் இழந்தது. ஆனாலும் முகமது அஸ்ரபுல், தலைவர் ஹபிபுல் பஷார் இணைந்து பொறுப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினர்.

இந்த ஜோடி மெக்ராத், கிளெஸ்பி, கிளார்க் பந்துகளை திறன்பட எதிர்கொண்டது. பஷார் 47 ஓட்டம் எடுத்து ரன் அவுட் ஆனார். சிறப்பாகத் துடுப்பெடுத்தாடிய அஸ்ரபுல் தனது முதல் சதம் கண்டார். தவிர ஒரு நாள் கிரிக்கெட்டில் சதம் அடிக்கும் முதல் பங்களாதேஷ் வீரர் என்ற சாதனையும் படைத்தார்.

அடுத்த பந்திலே இவர் கிளெஸ்பி பந்தில் ஆட்டமிழந்தார். வெற்றி "மதில் மேல பூனையாக" இருக்க அடுத்து வந்த அப்தாப் அகமது ,முகமது ரபீக் இணைந்து விரைவாக ஓட்டம் சேர்த்தனர். கடைசியில் ஒரு ஓவரில் ஏழு ஓட்டம் எடுத்தால் வெற்றி என்ற விறு விறுப்பான நிலையை எட்டியது



ஆட்டம். கிளெஸ்பி பந்து வீசினார். அப்தாப் எதிர்கொண்டார்.

முதல் பந்து... அப்தாப் அடியில் சிக்சருக்குப் பறந்தது. ஓட்டம் சமன் ஆக, இரண்டாவது பந்தில் ஒரு ஓட்டம் எட்டி அபார வெற்றிபெற்றது பங்களாதேஷ் 49.2 ஓவர்களில் 250 ஓட்டங்களை எட்டி உலக சம்பியனை தோல்வியடைச் செய்த மகிழ்ச்சியில் துள்ளிக்குதித்தனர் பங்களாதேஷ் வீரர்கள்.

## நினைத்ததை செய்து முடித்துவிட்டேன்




அவுஸ்திரேலிய அணியை தனது அணி வெற்றி கொண்டதை பங்களாதேஷ் நாட்டவர் அனல் பறக்கும் விதத்தில் கொண்டாடுவர் என பயிற்றுநர் டேவ் வட்மோர் தெரிவித்துள்ளார்.

இந்த வெற்றி பற்றி அவர் பி.பி.சி. யிடம் தெரிவித்தபோது, தாம் நினைத்ததை செய்து முடித்துள்ளதாகவும், தொலைக்காட்சியைப் பார்த்த 140 மில்லியன் ரசிகர்கள் கைகளில் சென்றடைந்த பாரிய வெற்றி இது என்றும் தெரிவித்தார். போட்டி முடிந்ததும் அவர் தெரிவிக்கையில், பங்களாதேஷில் இப்போது என்ன நடக்கும் என்று தெரியாது என்றும் ஆனால், அதிர்ச்சியும் ஆனந்தமும் பெருகியிருக்கும் என்றார். முதலில் சிம்பாப்வேயுடன் முதலாவது டெஸ்ட் வெற்றியைப் பெற்றதாகவும், இப்போது இந்த மகத்தான ஒரு நாள் போட்டியையும் வென்றுவிட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் அணியின் மொகமட் அஷ்ரபுல்லின் துடுப்பாட்டம் பற்றியும் பாராட்டியுள்ளார். அஷ்ரபுல் சிறிலங்காவுக்கு எதிராக டெஸ்ட் போட்டியில் சதமடித்துள்ளார். இந்த வெற்றி குறித்து அந்நாட்டு பிரதமர் பேகம் காளிதாஷியா அணிக்கு பாராட்டுத் தெரிவித்துள்ளார். அத்துடன் டாக்காவில் பாடசாலை மாணவர் ஒருவர் தனது நாடு உலகையே வென்றுவிட்டது என ஆர்ப்பரித்துள்ளார்.

## வரலாற்றில் காணாத தோல்வி




நேற்று முன்தினம் இங்கிலாந்தின் கார்டிப்பில் நடைபெற்ற நட்வெஸ்ட் கிண்ண முக்கோண ஒரு நாள் போட்டியொன்றில் தனது அணி பங்களாதேஷ் அணியிடம் ஐந்து விக்கெட்டுக்களால் தோல்வி கண்டதையடுத்து அவ்வணியின் தலைவர் றிக்கி பொண்டிங் தனது கவலையை வெளியிட்டுள்ளார்.

இந்தத் தோல்வி தனது தலைமையின் கீழான வரலாற்றில் காணாத தோல்வி என்றும் தெரிவித்த அவர், தனது அணியை 249 ஓட்டங்களுக்கு கட்டுப்படுத்தி அவர்கள் வெற்றிபெற்றது மனவருத்தத்தையளிப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

தனது பந்து வீச்சாளர்கள் மட்டுமன்றி துடுப்பாட்ட வீரர்களும் 249 ஓட்டங்களுக்கு மேல் எடுக்கத் தவறிவிட்டதாகத் தெரிவிக்கும் அவர் பச்சையும், மஞ்சளும் கலந்து பிரகாசித்த எம்மை வித்தியாசமாக பார்க்கின்றார்கள் என்றும் தெரிவித்தார்.

எனினும் இது நீண்டு செல்ல விடமாட்டோம் என்றும் பங்களாதேஷ் முக்கோண தொடரைக் கைப்பற்றும் நிலைக்கு வந்துவிட்டதோ என்றும் தான் எண்ணுவதாக குறிப்பிட்டுள்ளார்.

## இன்று நான்தான் உலகின் மகிழ்ச்சியானவன்




அவுஸ்திரேலியாவை தோற்கடித்து நாங்கள் வலுவான அணி என்பதை நிரூபித்துள்ளோம். இதனால் நாங்கள் மகிழ்ச்சியின் எல்லைக்கே சென்று விட்டோம். உலகிலேயே நான்தான் இன்று மகிழ்ச்சியான மனிதன் என பங்களாதேஷ் கிரிக்கெட் அணித் தலைவர் ஹபிபுல் பஷார் தெரிவித்தார்.

இந்தப்போட்டியை வென்றிருப்பதால் ரசிகர்கள் எங்களிடம் இன்னும் எதிர்பார்ப்பார்கள். அதைப் பூர்த்தி செய்யும் வகையில் எங்கள் ஆட்டம் இனிமேல் இருக்கும் அதற்காகக் கடுமையாக உழைப்போம் என்றார்.

# கான்பெடரேசன் கால்பந்துப் போட்டி
# ஜேர்மனி, ஆர்ஜென்டினா அரையிறுதியில்




மினி உலகக் கோப்பை போட்டியாகக் கருதப்படும் கான்பெடரேசன் கால்பந்துப் போட்டி ஜேர்மனியில் நடந்து வருகிறது.

இதில் பிரேசில், ஆர்ஜென்டினா, ஜேர்மனி, மெக்சிக்கோ, அவுஸ்திரேலியா, துனிசியா, ஜப்பான், கிரீஸ் ஆகிய அணிகள் பங்கேற்று விளையாடி வருகின்றன. இதில் ஏ.பி என இரு பிரிவுகளாகப் பிரித்து போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

ஏ. பிரிவில் நேற்று முன்தினம் நடந்த போட்டி ஒன்றில் ஜேர்மனியும், துனிசியாவும் மோதின. இதில் ஜேர்மனி 3-0 கோல் என்ற கணக்கில் வெற்றி பெற்றது. அதேபோல் மற்றொரு போட்டியில் ஆர்ஜன்டினாவும், அவுஸ்திரேலியாவும் மோதின. இதில் ஆர்ஜென்டினா 4-2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

இதன் மூலம் ஜேர்மனியும், ஆர்ஜன்டினாவும் ஏ.பிரிவில் தலா ஆறு புள்ளிகள் பெற்று அரையிறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றன. ஏ பிரிவில் இடம்பெற்ற அவுஸ்திரேலியா, துனிசியா அணிகள் இதுவரை ஒரு போட்டியில் கூட வெற்றி பெறவில்லை.


பி. பிரிவில் பிரேசில், மெக்சிக்கோ அணிகள் தலா மூன்று புள்ளிகள் பெற்று முன்னணியில் உள்ளன.




இத்தாலியில் நடந்த 'ஐரோப்பிய தடகள சம்பியன்ஷிப்' போட்டிகளில் பெண்களுக்கான ஐந்தாயிரம் மீற்றர் ஓட்டப்பிரிவில் ரஷ்ய வீராங்கனை லிலியா சுபுகோவா முதலிடம் பெற்றார்.




## மதுபோதையில் இருந்தார் சைமன்ஸ் மீது விசாரணை



அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் அன்றூசைமன்ஸ் மதுபோதையில் இருந்ததாக குற்றஞ்சாட்டப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளார். கடந்த வெள்ளியன்று அணியின் நட்சத்திரப் பந்து வீச்சாளரான ஷேன் வோனின் 34ஆவது பிறந்த நாளன்று கார்டிப் நகர விடுதியொன்றில் அவரும் ஏனைய சில வீரர்களும் காலையில் உணவருந்திக் கொண்டிருந்ததாகவும் பின்னர் சகவீரர்கள் போட்டிக்குத் திரும்பியபோதும் சைமன்ஸ் விடுதியில் தங்கியிருந்ததாகவும் சந்தேகத்தின் பேரில் அவரைப் பரிசோதனை செய்தபோது அவரது வாயிலிருந்து மதுபான வாடை வீசியதாகவும் தெரிவித்துள்ளனர். இதன்படி கிரிக்கெட் விதிமுறைகளுக்கிணங்க அவர் விசாரிக்கப்பட்டு தண்டனை பெறவிருக்கிறார்.

சைமன்ஸ் தற்போது இங்கிலாந்து கவுண்டிப் போட்டிகளில் பங்கேற்று வருகிறார். எனினும் ஆஷஸ் தொடருக்கான அணியில் இவர் இடம்பெறவில்லை.


## அந்நிய மண்ணில் முதல் சதமடித்த இந்திய வீரர் மரணம்



இந்திய கிரிக்கெட் வரலாற்றில் அந்நிய மண்ணில் முதல் சதமடித்து முத்திரை பதித்த முஷ்டாக் அலி நேற்று முன்தினம் மரணமடைந்தார். மத்திய பிரதேச மாநிலத்தின் இந்தூரில் டிச.17, 1914 இல் பிறந்தவர் முஷ்டாக் அலி. தனது 19 வயதில் முதல் முறையாக இந்திய அணிக்காக விளையாடும் வாய்ப்புப் பெற்றார். 1933-34 இல் கொல்கத்தாவில் இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் சுழற்பந்து வீச்சாளராக அறிமுகமானார். இதில் ஏழாவது விக்கெட்டாக களமிறங்கிய இவர் தனது அபார ஆட்டத்தின் மூலம் மிக விரைவில் தொடக்க ஆட்டக்காரராக முன்னேற்றம் அடைந்தார். மிக மெதுவாக ஓட்டம் சேர்க்கும் அப்போதைய கால கட்டங்களிலேயே முஷ்டாக் விளாசல் ஆட்டம் ஆடி பெரும் புகழ் பெற்றவர்.

1936 இல் இங்கிலாந்து சென்ற இந்திய அணியில் தனது முதல் சதம் கண்டார். ஓல்ட் ட்ராபோர்டில் நடந்த இரண்டாவது டெஸ்ட் போட்டியில் இரண்டரை மணி நேரங்களில் 112 ஓட்டம் அடித்து சாதித்தார். இதன் மூலம் அந்நிய மண்ணில் சதம் அடித்த முதல் இந்திய வீரர் என்ற பெருமை பெற்றார். தவிர டெஸ்ட் அந்தஸ்து பெறாத போட்டிகளிலும் முஷ்டாக் அபாரமாக விளையாடியுள்ளார்.

## சிந்தனைக்கு



சுதந்திரம்தான் மனித வாழ்விற்கு அர்த்தத்தை கொடுக்கின்றது. முழுமையைக் கொடுக்கின்றது.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 20-06-2005

தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham23 ela@ yahoo.com

## அமைதியைக் குலைத்தல்!

திருமலை மாவட்டத்தில் மீண்டும் ஏதோ ஒரு வகையில் பதற்றத்தைத் தோற்றுவிக்க பௌத்த- சிங்களப் பேரினவாத சக்திகள் முற்பட்டுள்ளமை அண்மைக்கால நிகழ்வுகளின் வெளிப்பாடாகும். இதன் ஓர் அங்கமே சேருவிலவில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் வாகனமொன்றும், அதில் ஏற்றி வந்த படகுகள் இரண்டும் தீயிட்டுக் கொழுத்தப்பட்ட சம்பவமாகும்.

இத்தகைய சம்பவம் ஒன்றும் ஆச்சரியத்திற்குரியதோ, அன்றி அதிர்ச்சிக்குரியனவோ அல்ல. ஏனெனில் பௌத்த சிங்களப் பேரினவாதம் எவ்வேளையிலும் தமிழ்மக்கள்மீது பெரும் இன வன்முறையைக் கட்டவிழ்த்துவிடத் தயாராகவே உள்ளதென்பது வெளிப்படையானதொன்று.

திருமலையில்இவ்வன்முறை இடம்பெற்றுள்ளமையானது எதிர்பார்க்கப்பட்ட ஒன்றே. சிங்கள ஆட்சியாளர்கள் நீண்ட காலமாகவே திருகோணமலையில்கண்வைத்துள்ளமை அனைவருக்கும் தெரிந்ததே. இந்நிலையில் திருமலை நகரத்தில் மேற்கொள்ளப்படும் சிங்களப் பேரினவாத நடவடிக்கைகளின் பின்னணியில் நிச்சயமாக அரசியல் பின்னணி சார்ந்ததாகவே இருக்குமெனத் துணிந்து கூற முடியும்.

திருமலை மாவட்டத்தைச் சிங்களப் பேரினவாத சக்திகள் தமது கட்டுப்பாட்டிற்குள் வைத்துக் கொள்ளுதல் வேண்டும்.அன்றி திருமலை மாவட்டம் என்றும் குழப்பம் நிறைந்ததாயும், பதற்றம் நிறைந்ததாயுமே இருத்தல் வேண்டும் என்ற எண்ணப்பாட்டுடன் செயற்படுபவையாகவே உள்ளன. இவற்றுக்குச் சகல சிங்கள அரசியற் கட்சிகளும் பின்னணியாகச் செயற்படுபவையாகவுள்ளன.

திருமலை மாவட்டத்தை ஆக்கிரமித்தல் என்பது இலங்கையின் சுதந்திர காலத்தில் இருந்தே சிங்கள ஆட்சியாளர்களால் திட்டமிட்ட ரீதியில் பல கட்டங்களாக மேற்கொள்ளப்பட்டுவரும் நடவடிக்கையாகும். இதன் விளைவானது திருமலை மாவட்டம் இன வன்முறைகளை அடிக்கடி சந்திக்கவேண்டியதாகியது. இதன் காரணமாக இம் மாவட்டம் எப்பொழுதும் பதற்றமான மாவட்டமாகவே இருந்து வருகின்றது.

வேறுவிதமாகக் கூறுவதானால் அமைதியான சூழ்நிலையைச் சிங்களப் பேரினவாத சக்திகள் குலைக்க விரும்பும் போதெல்லாம் திருமலையில் பதற்றத்தையோ அவலத்தையோ தோற்றுவித்தல் என்பது சாதாரணமானதொன்றாக இருந்தது.இந்தவகையில் அண்மைக் காலத்தில் திருமலையில் கலகத்தை, பதற்றத்தைத் தோற்று விப்பதன் மூலம் அமைதியைச் சீர்குலைக்கத் தொடர்ச்சியான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

எடுத்துக்காட்டாக அண்மையில் ஜே.வி.பியின் பின்னணியுடன் திருமலையில் மேற்கொள்ளப்படும்தொடர் நடவடிக்கையை சுட்டிக் காட்ட முடியும். கடந்த மாவீரர் நாளில் தமிழீழத் தேசியக் கொடி ஏற்றுவதற்கு எதிராக இனவாதச் செயற்பாடுகளில் இறங்கிய ஜே.வி.பி படிப்படியாக அண்மையில் திருமலை நகரில் புத்தர் சிலை வைத்தலுடன் தொடர்புபட்டதாக இருந்தது.

இது ஒருபுறம் இருக்க, தமிழ் மக்கள் மீது அடிக்கடி தாக்குதல்களும் நடத்தப்பட்டுள்ளன. சிறிலங்கா ஆயுதப்படையினர் மற்றும் பொலிசாரின் உதவியுடன் இத்தாக்குதல்கள் தொடர்ந்து இடம் பெற்று வருகின்றன. தமிழருக்கு எதிரான வன்முறைகள் சிறிலங்கா நீதித்துறையால் என்றுமே பொருட்படுத்தப்படுபவையாக இருக்கவில்லை.

இந்த நிலையிலேயே திருமலையில் வன்முறையைத் தூண்டும் வகையிலான அடுத்தகட்ட நடவடிக்கையைச் சேருவிலவில் தமிழர் புனர்வாழ்வுக் கழக வாகனம் தீ வைக்கப்பட்டதோடு, தமிழ் மக்கள் மீது தாக்குதலும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.இவ்வன்முறையானது திட்டமிட்ட ரீதியில் மேற்கொள்ளப்பட்டதென்பதற்குத் தமிழர் புனர்வாழ்வுக்கழக வாகனம் தாக்கப்பட்டமையே எடுத்துக்காட்டாகக் கொள்ளத்தக்கதாகும்.

வழமையான, தமிழ் மக்களுக்கு எதிரான வன்முறை என்பதற்கும் அப்பால் தமிழர் புனர்வாழ்வுக்கழகம் மீதான தாக்குதல் என்ற ரீதியில் இது தனித்துவமான முக்கியம்வாய்ந்ததாகவுள்ளது. ஏனெனில், தமிழர் புனர்வாழ்வுக்ழகம் மீது அண்மைக்காலத்தில் சிங்களப் பேரினவாத சக்திகளும், சிங்கள அரசியற் கட்சிகளும் கடும் சினம் கொண்டுள்ளன. அதாவது தமிழ் மக்களின் துயர் துடைக்க தமிழர் புனர்வாழ்வுக்கழகம் மேற்கொள்ளும் நடவடிக்கைகளினால் அவை சீற்றம் அடைந்துள்ளன.

இந்நிலையில், திருமலைத் தாக்குதலானது தமிழர் மீது வன்முறைகளைக் கட்டவிழ்த்துவிடுதல் என்பது மட்டுமல்ல தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் செயற்பாட்டை முடக்கும் நோக்கமும் கொண்டதாகும். அதாவது தமிழ் மக்கள் மீதான வன்முறையைக் கட்டவிழ்த்து விடுதல் என்பது மட்டுமல்ல அவர்களுக்கு நிவாரணப் பணிகள் எவையும் சென்று சேருதல் கூடாது என்ற வெறித்தனமான சிந்தனையும் கொண்டதாகும்.

# பொதுக் கட்டமைப்பை மறுக்கும் பேரினவாதிகளால் எமக்கு எவ்வாறு நிரந்தரத் தீர்வை வழங்க முடியும்?

### -பாராளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கம் கேள்வி

(யாழ்ப்பாணம்)

பேரினவாதிகளால் மிகச் சாதாரண மனிதாபிமான பொதுக் கட்டமைப்பைக் கூட ஏற்க முடியவில்லை. இந்நிலையில் இவர்களால் எமக்கு எந்த வகையில் நிரந்தரத்தீர்வு கிடைக்கப்போகின்றது. எனவே எமது சுயபலத்தில் எமது உரிமை களை நாமே வென்றெடுப்போம்.

இவ்வாறு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார். நேற்று யாழ். பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற தமிழ்த் தேசியத்தின் குரல் நிகழ்வில் கலந்து கொண்டு உரை நிகழ்த்தும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் உரை நிகழ்த்துகையில்;பல நூற்றாண்டுகளாக தனித்தமிழ் மன்னர்களால் ஆளப்பட்டது எமது நாடு. ஆங்கிலேயரினாலும், ஒல்லாந்தரினாலும், போர்த்துக்கேயராலும் ஆக்கிரமிக்கப்பட்டதே தவிர எந்தக் காலத்திலும் சிங்களவரிடம் நாம் தோற்ற வரலாறு கிடையாது.

அந்நிய நாட்டவரிடம் இருந்து இலங்கைக்கு சுதந்திரம் வழங்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்ட காலத்திலிருந்து எமது மொழி இரண்டாம் தர மொழியாகவே நோக்கப்பட்டு வருகிறது. இந் நிலையில் எம்மவர்களால் அகிம்சை வழியில் மேற்கொள்ளப்பட்டு வந்த போராட்டங்கள் எல்லாம் பேரினவாதிகளால் அடக்கி ஒடுக்கப்பட்டே வந்தன. இந்நிலையிலேயே 1976 இல் வட்டுக் கோட்டையில் தனித் தமிழீழப் பிரகடனம் மேற்கொள்ளப்பட்டது.

இதற்கு முழுமையான ஆதரவினை 1977இல் நடைபெற்ற பொதுத்தேர்தலில் தமிழ்மக்கள் வெளிப்படுத்தியிருந்தனர். இதன் பின்னரும் அகிம்சை ரீதியில் முன்னெடுக்கப்பட்ட போராட்டங்கள் பேரினவாதிகளால் ஒடுக்கப்பட்டு தமிழர்கள் மீதுபோர்த்திணிப்பு மேற்கொள்ளப்பட்டது. இந்நிலையிலேயே ஆயுதப் போராட்டம் மீண்டும் வலுவடைந்து. அதன் பின்னர் 2002 ஆம் ஆண்டு சரியான படைச் சமநிலையுடன் தமிழீழத் தேசியத்தலைவர் மேதகு பிரபாகரன் அவர்களால் சிறிலங்கா பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் போர் நிறுத்த உடன்பாடு எட்டப்பட்டது.

போர் நிறுத்த உடன்பாடு ஏற்பட்டு மூன்று ஆண்டுகளை எட்டியுள்ள நிலையில் எந்தவித தீர்வும் எட்டப்படவில்லை. மீண்டும் தமிழ் மக்களைச் சீண்டும் வகையிலான செயற்பாடுகளையே சிறிலங்கா அரசு தொடர்ந்தும் மேற்கொண்டு வருகின்றது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# சிவராம் படுகொலை விசாரணையை நிறுத்துமாறு பொலிசாருக்கு உயர்மட்டத்திலிருந்து உத்தரவு

(கொழும்பு)

மாமனிதர் சிவராம் படுகொலை தொடர்பான விசாரணைகளை உடனடியாக நிறுத்தும்படி சிறிலங்கா பொலிசாருக்கு உயர்மட்டத்திலிருந்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சிவராம் படுகொலை தொடர்பான மர்மம் விலகி வருவதாகவும் கொலை தொடர்பான சந்தேக நபர்கள் அனைவரையும் கைது செய்யும் வரை விசாரணைகள் தொடர்பான தகவல்களை வெளியிடாமல் இரகசியம் காத்து வருவதாகவும் இரண்டு வாரங்களுக்கு முன்னர் பொலிசார் தெரிவித்தனர்.

பொலிசார் மேற்கொண்ட பூர்வாங்க விசாரணைகளில் புளொட் அமைப்பு சிவராம் படுகொலையில் சம்பந்தப்பட்டிருப்பது தெரியவந்தது. அதன் பிரகாரம் தொடர்ந்து விசாரணைகளை மேற்கொண்டு வரும் வேளையில் விசாரணைகளை நிறுத்தும் படி பொலிசாருக்கு உயர் மட்டத்திலிருந்து அழுத்தம் பிரயோகிக்கப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

# ஜே.வி.பியை மீண்டும் இணைக்க பிரதமர் ராஜபக்ஷ பகீரதப் பிரயத்தனம்

(கொழும்பு)

அரசை விட்டு வெளியேறிய ஜே.வி.பி.யை மீண்டும் ஆட்சிக் கூட்டணிக்குள் கொண்டு வருவதற்கு பிரதமர் மகிந்த ராஜபக்ஷ பகீரதப் பிரயத்தனம் செய்து வருகிறார்.

அதன் ஒரு கட்டமாக எதிர்வரும் புதன்கிழமை ஜே.வி.பி உறுப்பினர்களை மீண்டும் பேச்சுக்கு அழைத்துள்ளார். கடைசியாக ஜே.வி.பி.யினரை பிரதமர் அழைத்து பேச்சு நடத்திய போதும் அது பலன் தரவில்லை.

பிரதமரின் வேண்டுகோளையும் ஏற்காமலேயே ஜே.வி.பி.யினர் அரசை விட்டு வெளியேறினர். தற்போது மீண்டும் ஜே.வி.பியினருக்கு அவர் அழைப்பு விடுத்துள்ளார்.

கூட்டணிக்கட்சித் தலைவர்கள் மற்றும் அமைச்சர்கள் ஆகியோருடன் அலரி மாளிகையில் நடத்திய மூன்று மணிநேர சந்திப்பை அடுத்து பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தொலைபேசி மூலம் ஜே.வி.பி.யினருக்கு இந்த அழைப்பை விடுத்துள்ளார்.

அலரிமாளிகை சந்திப்பில் ஜே.வி.பி.யினரை மீண்டும் கூட்டணிக்குள் கொண்டு வரும்படி பிரதமருக்கு வலியுறுத்தப்பட்டது.

இந்தச் சந்திப்பில் ஆளும் கூட்டணியில் அங்கம் வகிக்கும் கட்சித் தலைவர்களான டக்ளஸ் தேவானந்தா, தினேஸ் குணவர்த்தன ஆகியோர் உட்பட சிரேஷ்ட அமைச்சர்களும் கலந்து கொண்டனர்.

# சிறிலங்காவுடன் பாதுகாப்பு ஒப்பந்தம் செய்யக்கூடாது; இந்தியப்பிரதமரிடம் வைகோ மீண்டும் வலியுறுத்து!

சிறிலங்காவுடன் எந்தவிதமான பாதுகாப்பு உடன் படிக்கைகளிலும் இந்தியா ஈடுபடக் கூடாதென இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கிடம் ம.தி.மு.க பொதுச் செயலர் வைகோ மீண்டும் வலியுறுத்தியிருக்கிறார். நேற்று முன்தினம் மன்மோகன் சிங்குடன் நடந்த சந்திப்பில் வைகோ இதனை வலியுறுத்தியிருக்கிறார்.

நேற்று முன்தினம் டில்லி சென்ற வைகோ அங்கு பிரதமர் மன்மோகன் சிங்கை சந்தித்துப் பேசினார்.

இச்சந்திப்புத் தொடர்பாக வைகோ தெரிவித்துள்ளதாவது;

சிறிலங்காவுடன் எந்தவிதமான பாதுகாப்பு உடன்படிக்கைகளிலும் இந்தியா ஈடுபடாது என இந்தியப் பிரதமர் முன்னர் உறுதியளித்திருந்தார்.

ஆனால் அண்மையில் கொழும்பு சென்றிருந்த வெளிவிவகார அமைச்சர் நட்வர்சிங், சிறிலங்காவுடன் விரைவில் பாதுகாப்பு உடன்படிக்கை கைச்சாத்திடப்படவுள்ளதாகத் தெரிவித்திருந்தார்.

நட்வர்சிங்கின் கருத்து இந்திய அரசின் கருத்தாக இருக்குமென நான் நம்பவில்லை. முன்னர் எனக்கு தாங்கள் அளித்த உறுதி மொழியிலிருந்து விலகிவிடமாட்டீர்கள் என நம்புகிறேன் என பிரதமரிடம் தெரிவித்தேன்.

சிறிலங்காவிற்கு இந்தியா வழங்கும் இராணுவ உதவிகள் தமிழ் மக்களை அழிக்கவும், நசுக்கவுமே பயன்படும் என்பதை பிரமருக்கு தெரியப்படுத்தினேன் எனவும் வைகோ தெரிவித்துள்ளார்.

# மருந்துப் பொருட்களுடன் உலங்குவானூர்தி உதிரிப்பாகங்கள் கொண்டு வந்தனராம்

## -ஓமந்தை சோதனைச் சாவடியில் மூவர் கைது

(வவுனியா)

மருந்துப் பொருட்களுடன் உலங்கு வானூர்திக்குரிய உதிரிப் பாகங்களைக் கொண்டு வந்ததாகக் கூறி ஓமந்தை இராணுவச் சோதனைச் சாவடியில் வைத்து மூன்று பேர் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேற்படி மூவரும் பின்னர் வவுனியா பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டபோது அவை உலங்கு வானூர்திக்குரிய உதிரிப் பாகங்கள் இல்லை எனத் தெரிய வந்துள்ளதாகவும், ஆனால் இது குறித்து விசாரணைகள் நடத்தப் படுவதாகவும், அவர்கள் விசாரணையின் பின்னர் விடுதலை செய்யப்படுவார்களெனவும் வன்னிப் பிராந்தியப் பிரதிப் பொலிஸ் மா அதிபர் மகிந்த பத்தவல கூறியுள்ளார்.

## —நட்வெஸ்ட் முத்தரப்புப் போட்டி—

# அவுஸ்திரேலிய அணி இங்கிலாந்திடம் தோல்வி!

(லண்டன்)

பிற்றர்சனின் அபார துடுப்பாட்டத்தின் மூலம் அவுஸ்திரேலிய அணியை மூன்று விக்கெட்டுக்களால் இங்கிலாந்து அணி வெற்றிபெற்றுள்ளது.

இங்கிலாந்தில் நடைபெற்றுவரும் நட்வெஸ்ட் முத்தரப்பு ஒரு நாள் கிரிக்கெட் போட்டியில் நேற்று நடைபெற்ற இங்கிலாந்து-அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையிலான மூன்றாவது லீக் ஆட்டத்தில் இங்கிலாந்து அணி மூன்று விக்கெட்டுக்களால் அவுஸ் அணியைத் தோற்கடித்தது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற அவுஸ்திரேலிய அணித்தலைவர் ரிக்கிபொண்டிங் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தார். இதற்கமைய 50 ஓவர்கள் நிறைவில் ஒன்பது விக்கெட்டுக்களை இழந்து 252 ஓட்டங்களைப் பெற்றது. இதில், கௌசி 84 ஓட்டங்களையும், கிளார்க் 45 ஓட்டங்களையும், ஹெய்டன் 31 ஓட்டங்களையும் அதிக பட்சமாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் ஹர்மிசன் 33 ஓட்டங்களைக் கொடுத்து ஐந்து விக்கெட்டுக்களையும், பிளின்டொப் 39 ஓட்டங்களைக் கொடுத்து இரண்டு விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு 253 என்ற வெற்றி இலக்கு நோக்கிய ஆடிய இங்கி



லாந்து அணி பிற்றர்சனின் அபார துடுப்பாட்டத்தின் மூலம் 47.3 ஓவர்கள் நிறைவில் ஏழு விக்கெட்டுக்களை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது. இதில் பிற்றர்சன் ஆட்டமிழக்காது 65 பந்துகளில் 91 ஓட்டங்களைப் பெற்றார். இதில் நான்கு சிக்சர்களும், எட்டு பவுண்டரிகளும் அடங்கும் மற்றும் அணித் தலைவர் வோகன் 57 ஓட்டங்களையும், பிளின்டொப் 19 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர். பந்து வீச்சில் கொக் 42 ஓட்டங்களைக் கொடுத்து மூன்று விக்கெட்டுக்களையும், மெக்ராத் 34 ஓட்டங்களைக் கொடுத்து இரண்டு விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

# மேல்மாகாண சபை முதலமைச்சர் ரெஜினோல்ட் கூரே நேற்று இராஜினாமா!

(கொழும்பு)

மேல்மாகாண சபையின் தலைமை அமைச்சர் ரெஜினோல்ட் கூரேக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை விவாதம் இன்று இடம்பெறவுள்ள நிலையில் அவர் தனது இராஜினாமாக் கடிதத்தை ஆளுநரிடம் நேற்று கையளித்துள்ளார்.

ஜே.வி.பி.யினர் அரசிற்கு வழங்கி வந்த ஆதரவை வாபஸ் பெற்றதன் பின்னர், முதன் முதலாக மேல் மாகாணசபை இன்று கூடவுள்ளது.

39 உறுப்பினர்களைக் கொண்ட எதிர்கட்சியாக ஐக்கிய தேசியக் கட்சி இயங்கும் அதேவேளை, ஜே.வி.பி.யும் எதிர்கட்சி வரிசையில் சுதந்திரமாக இயங்கவிருக்கின்றது.

இதேவேளை, இந்த நம்பிக்கை இல்லாப்பிரேரணை குறித்து கருத்து வெளியிட்ட தலைமை அமைச்சர் ஐக்கிய தேசியக் கட்சியினால் கொண்டுவரப்பட்ட இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஜே.வி.பி.யினரும் இணைந்து தனக்கெதிராக வாக்களிக்கும் பட்சத்தில் தான் தோற்கக் கூடிய சாத்தியக் கூறுகள் தென்படுகின்றன. அதேவேளை, ஐக்கிய தேசியக் கட்சியினால் மட்டும் தனக்கெதிராக வாக்களிப்பதன் மூலம் தன்னை தோற்கடிக்க முடியாது எனத் தெரிவித்தார். எனினும் இன்றைய வாக்கெடுப்பில் எதிர்க்கட்சி வாரிசைக்குச் சென்ற ஜே.வி.பியும் எதிர்த்து வாக்களிக்கும் என தகவல்கள் வெளியானதை அடுத்து தோற்கும் நிலை ஏற்படும் எனக் கருதிய முதலமைச்சர் ரெஜினோல்ட் கூரே இறுதி நேரத்தில் தனது முடிவை மாற்றி இராஜினாமாச் செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (32)

## சமாதான...

"ஆனால் சிறிலங்கா அரசு பொதுக்கட்டமைப்பு விடயத்துக்கு அரசியல் சாயம் பூசவோ, அல்லது அதனை அரசியல் மயமாக்கவோ முனைந்தால் அது குழப்பப்பட்டு விடுமா என்பது குறித்து நாம் கவலையடைகிறோம்" என்று கூறியுள்ளார்.

அரசை விட்டு ஜே.வி.பி விலகியது குறித்து கேட்டபோது பொதுக் கட்டமைப்பு விவகாரம் தான் அரசிலிருந்து ஜே.வி.பி வெளியேறுவதற்கு பிரதான காரணம் என்று கூறமுடியாது. சனாதிபதிக்கும், ஜே.வி.பிக்கும் இடையில் ஆரம்பத்திலிருந்தே கொள்கையளவில் முரண்பாடுகள் இருந்து வந்துள்ளன. ஆகவே இரு தரப்பினருக்கும் இடையிலான பிணக்குக்கு பொதுக்கட்டமைப்பு விடயம் தான் உண்மையான காரணம் என்று தனிமைப் படுத்திக் கூறிவிடமுடியாது என்று தெரிவித்தார்.

## பேரினவாத....

பருத்தித்துறை திக்கம் சந்தியிலிருந்து ஆரம்பமாகும் இந்தப் பேரினவாதத்துக்கு எதிரான கண்டனப் பேரணி சுப்பர் மடம் சந்திவரை சென்று அங்கு நிறைவடையும்.

இப்பேரணியின் முடிவில் தென்னிலங்கையில் சுனாமி அனர்த்த நிவாரண பொதுக்கட்டமைப்புக்கு எதிரான பேரினவாத மேலாதிக்க வெறியர்களின் வெறித்தனமான தமிழின ஒடுக்குமுறை நடவடிக்கைகளைக் கண்டிக்கும் மாபெரும் கண்டனப் பொதுக்கூட்டம் ஒன்றும் நடைபெறும்.

பௌத்தசிங்கள பேரினவாத வெறியர்களை எதிர்கொள்வதற்காக தமிழீழ தேசியத்தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்களின் கரங்களைப் பலப்படுத்துவோம்." என்ற தொனிப் பொருளில் இப் பொதுக்கட்டம் நடைபெறுகின்றது.

தேசியத் தலைவர் வே.பிரபாகரன் அவர்கள் மற்றும் ஐக்கிய நாடுகள்சபை செயலாளர் ஆகியோருக்கான மகஜர்களும் கடற்றொழிலாளர்களால் கையளிக்கப்படவுள்ளன. (33,27)

## முஸ்லிம்....

உள்ளது. சிங்களப் பேரினவாதத்தால் முஸ்லிம்கள் பாதிக்கப்படவில்லை யென முஸ்லிம் அரசியல்வாதிகளால் கூறப்படும் கருத்துக்களை ஒரு போதும் ஏற்கமுடியாதென என்று தெரிவித்த இளம்பரிதி முஸ்லிம்களை தமிழர்களிடம் இருந்து வேறுபடுத்தி நோக்காது ஒட்டுமொத்தமாக தமிழ் பேசும் மக்கள் என்று விடுதலைப்புலிகள் அனைத்து விதமான நட்வடிக்கைகளையும் மேற்கொண்டு வருகின்றனர்.

விடுதலைப்புலிகள் மதவேறுபாடுகளுக்கு அப்பாற்பட்டு முஸ்லிம் மக்களும் இணைந்து வாழவேண்டுமென விருப்பம் கொண்டுள்ளனர். யாழ்.குடாநாட்டில் இருந்து இடம் பெயர்ந்த முஸ்லிம் மக்கள் மீள்குடியேற வேண்டுமென்பதில் விடுதலைப்புலிகள் மிக ஆர்வமாக உள்ளார்கள். இதற்குப்பல நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகின்றார்கள்.

யாழ்ப்பாணத்திலும் முஸ்லிம் மக்கள் குடியேறுவதில் வியாபாரம் செய்வதிலும் ஏதேனும் பிரச்சினை கொண்டால் அவற்றை தீர்த்து வைப்பதுக்கும் விடுதலைப்புலிகள் தயாராக உள்ளனர். முக்கியமாக முஸ்லிம் மக்களின் பிரச்சினை குறித்து எமது தலைமை அதிக அக்கறை கொண்டுள்ளது. முஸ்லிம் மக்களுக்குரிய அரசியல் எதிர்காலத்தை உள்ளடக்கியதாகவே தமிழீழ விடுதலைப்புலிகளின் விடுதலைப் போராட்டம் தொடர்ந்து வருகின்றது. எனவே எதிர்காலத்தில் அமையவிருக்கும் அரசியல் தீர்வு முஸ்லிம்களுக்கும் திருத்தி அமைக்கும் வகையிலும் அமையும் எனவும் இளம்பரிதி தெரிவித்தார். யாழ்ப்பாணம் முஸ்லிம் தெருவில் அமைந்துள்ள ஒஸ்மாரியா கல்லூரியில் நேற்று பிற்பகல் நான்கு மணியளவில் முஸ்லிம் மக்கள் பணிமனைத் தலைவர் மௌலவி புலியான் தலைமையில நடைபெற்ற நிகழ்வில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கம், சிவநேசன், ஈழவேந்தன் மற்றும் மௌலவிகளான இர்பான், ஷகில் ஆகியோர் உட்பட பள்ளி வாசல் நிர்வாகிகள் முஸ்லிம் மக்களெனப் பலர் கலந்து கொண்டனர். (41,27,சு)

## -மன்னாரில் அரசியல்துறை செயலகங்கள் மீதான -

# தாக்குதல்களைக் கண்டித்து கண்காணிப்புக் குழுவிற்கு முறைப்பாடு

(மன்னார்)

மன்னார் மாவட்ட அரசியல் துறை செயலகம்மீதும், மன்னார் இணை நிர்வாகச் செயலகம் மீதும் அரச படைகளின் தேச விரோதக் குழுவினால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தைக் கண்டித்து மன்னார் அரசியல்துறை துணைப்பொறுப்பாளர் அருந்தவம் போர் நிறுத்தக்கண்காணிப்புக் குழுவிற்கு கண்டன கடிதமொன்றை அனுப்பியுள்ளார்.

அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

நேற்று முன்தினமிரவு 9.15 மணியளவில் தலை மன்னார் வீதியில் அமைந்துள்ள மாவட்டச்செயலகம் மீதும், மூதூர் வீதியில் அமைந்துள்ள கிளைச்செயலகம் மீதும் ஒரே நேரத்தில் ஒரேவிதமாக நடத்தப்பட்ட தாக்குதல் திட்டமிடப்பட்டு அரச கூலிப்படைகளின் ஆதரவோடு தேசவிரோதக்குழுக்கள் நடத்திய தாக்குதலாகும். இச்சம்பவம் மூன்றாவது தடவையாக நடைபெற்றுள்ளது.

தற்போது நிலவியிருக்கும் சமாதானச் சூழலிலும் வடக்கு கிழக்குப்பிரதேசங்களில் திட்டமிட்டவாறு இவ்வாறான சம்பவங்கள் தொடர்ந்து நடைபெற்று வருவதால் சிறிலங்கா அரசு தேசவிரோதிகளைப்பயன்படுத்தி திட்டமிட்டவாறு இவ்வாறான குழப்பங்களை ஏற்படுத்தி வருகின்றது.

சமாதானச் சூழ்நிலையைக் குழப்பி மீண்டும் யுத்தத்திற்காகவே அரசும், அரசபடைகளும் இவ்வாறான தாக்குதல்களை நடத்தி வருவதால் பாரிய விளைவுகளை சந்திக்கவேண்டிவரும்.

அத்துடன் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் நிராயுதபாணியாக அரசியலில் ஈடுபடும் போராளிகள் மீதும் தொடர்ந்தும் தாக்குதல் நடத்திவருகின்றார்கள். இது ஒரு யுத்த நிறுத்த மீறல் ஆகும். இத்தகைய சம்பவங்களை வன்மையாகக் கண்டிக்கின்றோம் எனவும் அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (18)

# இலங்கைத் தமிழர் அகதிமுகாம்களில் தமிழ் நாட்டில் திடீர் சோதனை

(சென்னை)

இந்தியாவின் தமிழ்நாடு முழுவதும் உள்ள இலங்கை அகதி முகாம்களில் நேற்று முன்தினம் அதிகாலை நான்கு மணி முதல் மதியம் ஒரு மணிவரை பொலிசார் அதிரடி சோதனை நடத்தியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அப்போது முகாமில் பதிவு செய்து தங்கியிருப்பவர்கள் மற்றும் அதிகமாக தங்கி இருப்பவர்கள் பற்றி கணக்கெடுக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

விடுதலைப்புலிகள் யாராவது அகதிகள் என்ற பெயரில் இருக்கிறார்களா என்று சோதனை நடத்தப்பட்டதாக பொலிசார் தெரிவித்துள்ளனர். (32)

## த.தே.கூ....

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டுள்ளனர். சுமார் ஒரு மணி நேரம் இடம் பெற்ற சந்திப்பில் ஐக்கிய தேசியக்கட்சி சார்பில் அதன் முக்கிய பிரமுகர் ஜீ.எல்.பீரிசும் கலந்து கொண்டார்.

## பேரினவாதக்....

தமிழருக்கு இது புதிதல்ல

இலங்கைத்தீவு சுதந்திரம் அடைந்தாகச் சொல்லப்படும் காலத்திலிருந்து இலங்கைத்தீவு முழுவதும் தமக்கே உரியது என்பதுதான் சிங்கள பௌத்த பேரினவாதத்தின் நிலைப்பாடு.

ஆனால் இலங்கைத்தீவில் நீண்ட நெடுங்காலமாக தன்னாட்சி இறைமையுடன் தமிழ் மக்கள் வாழ்ந்து வந்துள்ளமையை புறந்தள்ளி தமிழ் மக்களை இரண்டாம் தரப் பிரஜைகளாக்கும் பல்வேறு நடவடிக்கைகள் சிங்கள பௌத்த பேரினவாதத்தால் மேற்கொள்ளப்பட்டது.

குடியுரிமை, நிலம்,மொழி, கல்வி ரீதியாக மட்டுமின்றி இராணுவ ரீதியாகவும் தமிழ்மக்கள் நசுக்கப்பட்டு வருகின்றனர்.

வரலாற்று ரீதியாக இலங்கைத் தீவின் வடக்கு-கிழக்கு தமிழ் பேசும் மக்களின் தாயகமாகும்.

சிங்கள பௌத்த பேரினவாத ஒடுக்குமுறையிலிருந்து விடுபட்டு விடுதலை வாழ்வு வாழ வேண்டும் என்பதே தமிழ் மக்களின் உறுதியான நிலைப்பாடு .

கடந்த ஐம்பது வருடங்களுக்கு மேலான எமது பட்டறிவின் வெளிப்பாடே இந்த விடுதலைவேட்கை. இன்று இயற்கை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்கும் ஒரு சிறுகட்டமைப்பைக் கூட ஏற்க மறுக்கும்ஒரு குரூரத்தை வெளிப்படுத்தி நிற்கிறது சிங்கள பௌத்த பேரினவாதம் என அதில் மேலும் தெரிவிக்கப்படுள்ளது. (சு,28,33,41)

## மனிதநேய....

சமூகப் பெரியார்கள், புத்திஜீவிகள், மக்கள் பிரதிநிதிகள் எனப் பெருமளவானோர் கலந்து கொண்ட "தமிழ்த் தேசியத்தின் குரல்" எழுச்சி நிகழ்வு நடைபெற்றது.

இதில் வணபிதா பேணாட், நல்லை ஆதீன குரு முதல்வர் ஸ்ரீல ஸ்ரீ ஞான சம்பந்த தேசிக பரமாச்சாரிய சுவாமிகள், மௌலவி சகீல், பாராளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கம், பேராசிரியர் சு.மோகனதாஸ் ஆகியோர் உரை நிகழ்த்தியதுடன் "தமிழ்த் தேசியத்தின் குரல்" என்ற தலைப்பிலான பிரகடனமும் வாசிக்கப் பட்டது.

அத்துடன் இப்பிரகடனத்தில் நிகழ்வில் கலந்து கொண்ட அனைவரிடமிருந்தும் கையெழுத்துக்கள் பெறப்பட்டு அது தமிழீழதேசிய தலைவர் மற்றும் சர்வதேசநாடுகள் என்பனவற்றுக்கு அனுப்பி வைக்கப் பட்டது. (சு,28,33,27,41)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு யூன் மாதம் 20 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது